**இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் 2020**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுதாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம்மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப்பெற்றுக் கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல்,வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கூட்டுத்தாபனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்தில் உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல்

வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் கூட்டுத்தாபனத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க ஆணைக்குழு செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால ல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ''சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல்

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 1 பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவு நியாயமான மதிப்பின் (Fair Value) மீது முன்வைக்கப்பட வேண்டியிருப்பினும் கூட்டுதாபனத்தினால் மோடார் வாகனங்கள் தவிர கிரயம் ரூபா 1,827.37 மில்லியனான ஆதனம் பொறி உபகரணங்களினுடைய நியாயமான பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதி கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை மூலம் பல சந்தர்பங்களில் மதிப்பீட்டு காணியின் கீழ் ஆதனம், பொறிகள் உபகரணங்களின் பெறுமதியை காட்ட உத்தேசித்துள்ளதால் 2019.12.31 திகதியன்று மோடார் வாகன மீள்மதிப்பீடொன்றை சுயாதீன குழுவொன்றின் மூலம் மோடார் வாகன ஆணையாளர் திணைக்கள அலுவலர் ஒருவரின் பங்குபற்றலுடன் மேற்கொண்டதுடன் அப் பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் காட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்களின் நியாயப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன், 36 ஆம் பிரிவிற்கமைய ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு உரிய ஏதேனும் உருப்படியொன்று மீள்மதிப்பீடு செய்யப்படுமாயின் அவ் உருப்படிக்குரிய சொத்து வகுப்பையுமே மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளபடியாக கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ரூபா 26.47 மில்லியனான ஜீப் வண்டியொன்று மீளாய்வாண்டிலும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் உடன்படுகிறேன். 2019.12.31 திகதியன்று மோடார் வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட போதும் அதனுள் உள்ளடங்கும் மோடார் சைக்கில்களை மீள்மதிப்பீடு செய்யப்படவில்லை. கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ள தவறுகளை தவிர்த்துக் கொள்ள கருத்திற் கொள்ளப்படுகிறது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன், 51 ஆம் பந்தி பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களிற்காக பயனுள்ள ஆயுட்காலத்தை மீளாய்வு செய்யாததால் கிரயம் ரூபா 492.81 மில்லியனான சொத்துக்கள் முழுமையாக தேய்மானம் இடப்பட்டிருந்த போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த சொத்துக்களில் ஏற்பட்ட மதிப்பீட்டுத் தவறினால் இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் திருத்த மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்புடன் உடன்படுகிறேன். 2021 ஆண்டு முதல் சொத்துக்களின் தேய்மான பெறுமதியை மதிப்பிடுகையில் எந்த சந்தர்ப்பத்திலும் சொத்தின் நிகழ்கால பெறுமதி அதன் கொள்வனவு பெறுமதியின் ஏற்பாடு 5% அல்லது அதற்கு அதிகமாக முடியுமென்ற கருதுகோளின் படி 5% Residential Value கீழாக தேய்வு ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 27 இன் 24 மற்றும் 25 ஆம் பிரிவு பிரகாரம் ஒன்றிணைந்த நிதக்கூற்றுக்களை தயாரிக்கும் போது தாய் கம்பனி மற்றும் துணைக் கம்பனிகள் ஒரேவகையான கணக்கீட்டு கொள்கைகளை பின்பற்ற வேண்டிய போதும் மீளாய்வாண்டு முதல் கூட்டுத்தாபன இருப்புகளை பெறுமதியிடும் கொள்கை முதல் உள்ளே முதல் வெளியில் முறையில் (FIFO) இலிருந்து மொத்த சராசரி கிரயத்திற்கு (WAC) மாற்றியிருந்தது. எனினும் கூட்டுத்தாபன துணைக் கம்பனியான காணி அபிவிருத்தி மற்றும் எல்.ஆர்.டி.சீ சேவைகள் தனியார் கம்பனியில் இருப்பு கிரய கணக்கிடல் முதல் உள்ளே முதல் வெளியே முறைக்கு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக தேவையான செம்மையாக்கல்கள் மேற்கொள்ளாது தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. | அவதானிப்புடன் உடன்படுகிறேன். 2021 ஆண்டு முதல் துணை கம்பனிகளின் இருப்பு மதிப்பிடும் கொள்கை மொத்த சராசரி கிரய முறைக்கி (Weighted Average Cost) திருத்தப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம், சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 40 பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள கிரயம் ரூபா 158.28 மில்லியனான இரண்டு முதலீட்டு சொத்துக்களின் சாதாரன பெறுமதியை கணக்கிட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணி மதிப்பீட்டிக்காக பாரிய கிரயமொன்று செலவாகின்றதால் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்காகவே, அதன் நியாயமான பெறுமதி மதிப்பீடு செய்யப்படவில்லை. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் ஏனைய தேவைக்காக இதன் நியாயமான பெறுமதியை கணக்கிடுகையில் அதனை அடிப்படையாக கொண்டு காணியின் நியாயமான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம், சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 14 திகதி ஆரம்பித்து 2019 ஆகஸ்ட் 31 | கண்கீட்டு கொள்கை பிரகாரம் ஒப்பந்த வருமானத்தை | ஒப்பந்தத்தை உரிய திகதியில் பூர்த்தி |

| | | | |
|---|---|---|---|
| | திகதி பூர்த்தி செய்ய எதிர்பார்த்த ஒப்பந்தத்தை உரிய தினதிதில் பூர்த்தி செய்து இருந்ததுடன் அதற்காக நிலையான தொழில்நுட்ப குழு விகித பரிந்துரைகளும் 2020 ஆண்டினுள் கிடைத்திருந்த பொதும் அதன் பெறுமதியான ரூபா 3.29 மில்லியனான வருமானம் பொறியியல் வேலை சான்றிதல் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்காததால் கணக்கீடு செய்ய மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்கீடு செய்ய முடியுமாவது தகைமையுடைய பொறியியலாளரின் வேலை சான்றிதல் கிடைத்த பின்னறே. இக் கருத்திட்டத்திற்குரிய வேலை சான்றிதல் கிடைக்காத காரணத்தால் 2020 ஆண்டில் கணக்கீடு செய்ய முடியவில்லை. நிலையான தொழில்நுட்ப குழுவின் பரிந்துரைகள் கிடைத்திருந்த போதும் இன்னும் வாடிக்கைளரினால் (3K Projct) இறுதி வேலை சான்றிதழை விநியோகிக்கவில்லை. எவ்வாறாயினும் 2021 ஆண்டில் இக் கருத்திட்டத்திற்குரிய ஒப்பந்த வருமானம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | செய்து உரிய பொறியியல் வேலை சான்றிதழை பெற்றுக்கொள்ள மற்றும் குறித்த வருமானத்தை உரிய ஆண்டில் கணக்கீடு செய்து அவ் வருமானத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் சனவரி மாதம் பூர்த்தி செய்த 03 வாடிக்கையாளர் ஒப்பந்தங்களிற்குரிய பொறியியலாளரின் பூர்த்தி வேலை சான்றிதழை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்காததன் மீது ரூபா 33.09 மில்லியனான ஒப்பந்த வருமானமொன்று கணக்கீடு செய்யப்படாத காரணத்தால் மீளாய்வாண்டில் ஒப்பந்த வருமானம் அப்பெறுமானத்தால் குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. | நிலையான தொழில்நுட்ப குழுவின் பரிந்துரை பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி பட்டியல் நகர அபிவிருத்தி அதிகாரி சபையினால் அங்கீகாரிக்க நீண்ட காலமொன்று எடுத்திருந்தது. எவ்வாறாயினம் 2021 ஆண்டின் விநியோகிக்கப்பட்ட இறுதி வேலை சான்றிதழ் பிரகாரம் எஞ்சிய கருத்திட்ட வருமானம் 2021 ஆண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டது. | சரியாக கணக்கிடப்பட்ட ஒப்பந்த வருமானம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் பூர்த்தி செய்த மற்றும் கூட்டுத்தொகை ரூபா 64.68 மில்லியனை ஒப்பந்த வருமானமாக 2020 ஆண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டிருந்த 2 ஒப்பந்தங்கள் தொடர்பாக பொறியியலாளர் ஒருவரின் பூர்த்தி செய்த வேலைகளை உறுதிப்படுத்தல் 2020 திசெம்பர் 31 திகதி வரையும் கிடைத்திருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுகிறேன். எவ்வாறாயினும் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு கருத்திட்டங்களுக்காக மீளாய்வாண்டினுள் ஒப்பந்த வருமானத்தை கணக்கிடும் போது வாடிக்கையாளர்/மதியுரை நிறுவனத்தால் வழங்கப்பட்ட வேலை சான்றிதழ் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட போதும் அங்கு உறுதி செய்த உத்தியோகத்தரின் கையொப்பம் | கணக்கு வைத்தல் உரிய கணக்கு கொள்கை பிரகாரம் குறிக்கப்பட்ட வேலை சான்றிதழ் பெற்றுக்கொன்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காணப்படவில்லை. அதேபோன்று நகர அபிவிருத்தி அதிகாரி சபையின் கீழ் 3 ஆம் இலக்க பட்டியளுக்குரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட போதும் கையொப்பமுடனான வேலை சான்றிதழ் வழங்கப்படாததுடன் மீளாய்வாண்டிக்கு உரிய வேலை அளவுகளுடன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல் மூலம் உறுதிப்படுபத்தப்பட்டது. | |
| (ஆ) | 03 ஒப்பந்தங்களிற்குரிய முன்னைய ஆண்டில் ஒப்பந்த செலவாக இனங்காண வேண்டியிருந்த ரூபா 6.21 மில்லியனான செலவுகள் மீளாய்வாண்டில் ஒப்பந்த செலவொன்றாக கணக்கீடு செய்த காரணத்தால் மீளாய்வாண்டில் ஒப்பந்த இலாபம் அப் பெறுமதியால் குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. | சில சந்தர்ப்பங்களில், ஒப்பந்ததாரர்களினால் தாமதித்து பட்டியல் சமர்ப்பித்தல், சமர்பிக்கப்படும் பட்டியல்கள் பரிட்சிக்கப்பட்டு அவற்றின் சரியான தன்மையை பரீட்சிக்க மேலதிக தகவல்களை கண்டறிய நேரிடல், போன்ற காரணங்களால் ஒப்பந்த செலவினம் குறிக்கப்பட்ட ஆண்டிலேயே கணக்கீடு செய்யப்படுவது விடுபடும் சந்தர்ப்பங்கள் உள்ளன. | ஒப்பந்தங்களிற்கான செலவுகள் அவ்வாண்டினுள் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 38 இன் 28 மற்றும் 29 பிரிவு பிரகாரம் அனுமதிப்பத்திர புதுப்பிக்கும் செலவு மூலதனமாக்க முடியாத போதும் 2020 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் ரூபா 1.2 மில்லியனான அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கும் செலவு நடைமுறை மூலதன வேலையாக உள்ளடக்கிய காரணத்தால் நடைமுறை மூலதன வேலை மற்றும் மீளாய்வாண்டில் இலாபம் அப்பெறுமானத்தால் மிகையாக கணக்கிடப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் உடன்படுகிறேன். 2021 ஆண்டில் இந்த கணக்கீட்டு தவறை சரிசெய்துள்ளது. | கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | வத்தல மாபோல நகர சபையினால் கெரவலபிடிய குப்பை முகாமைத்துவ கொட்டிலிற்கு வெளியேற்றிய குப்பைக்காக பணம் அறவிடாமைக்கு மற்றும் அத்திகதி வரை அவ் நிறுவனத்திலிருந்து அறவிட வேண்டியதான நிலுவையை அறவிடாதிருக்கவும் கூட்டுத்தாபனம் 2018 | கெரவலபிடிய குப்பை முகாமைத்துவ கொட்டில் அமைந்துள்ள நிலம் பிரதேச அதிகார எல்லையினுள் அமைந்துள்ளதால், வத்தல மாபோல நகர சபையினால் அறவிட வேண்டிய ரூபா 13.04 மில்லியன் தொகையை அறவிடாதிருக்க | கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்படாத பெற வேண்டிய மீதிகள் நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டில் தீர்மானித்திருந்த போதும் அந்நிறுவனத்திலிருந்து கிடைக்க வேண்டியதாக மற்றும் அதற்கான ஐயக்கடன் ஒதுக்கீடாக கணக்குகளில் காட்டியிருந்த ரூபா13.04 மில்லியனை மீளாய்வாண்டு இறுதி வரையும் கணக்குகளில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தில் முன்னைய முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது. அதனால் பணிப்பாளர் அங்கிகாரத்தை பெறுவதன் பின்னர் புத்தகங்களிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) | மீளாய்வாடில் 02 மதியுரை சேவைகளிற்காக கூட்டுத்தாபனம் மேற்கொண்ட ரூபா 155,458 ஆன செலவுகளிற்குரிய மதியுரை சேவை வருமானத்தை கணக்கிட்டு கணக்கீடு செய்திருக்காததுடன் 09 மதியுரை சேவைகளின் ரூபா 27 மில்லியன் வருமானத்திற்குரிய ரூபா 19.90 மில்லியனான மதியுரை சேவை செலவுகளை ஒவ்வொறு மதியுரை கருத்திட்டங்களிற்கும் வெவ்வேறாக இனங்கண்டிருக்கவில்லை. | கருத்திட்ட மதியுரை சேவை வழங்குவது கூட்டுத்தாபனத்தில் ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு பிரிவினால் ஆகும். ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு பிரிவின் செலவு பொது செயற்பாட்டு கிரயதினுள் உள்ளடங்குவதால், ஒவ்வொறு கருத்திடத்திற்கும் உரிய மதியுரை சேவை செலவு வெவ்வேறாக இனங்காண முடியாதுள்ளது. | கருத்திட்டங்களிற்கான செலவுகளை வெவ்வேறாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாணடில் செப்தம்பர் முதல் திசெம்பர் வரை மணல் விற்பனை வருமானத்தின் மீது செலுத்த வேண்டிய ரூபா 13.2 மில்லியனான உரிமையான்மை பங்கு செலவை கணக்கீடு செய்யாததால் உரிமையான்மை செலவு அப்பெறுமானத்தால் குறைவாக கணக்கிடபட்டிருந்ததுடன் அதனை மணல் விற்பனை வருமானத்திற்கு செம்மையாக்காத காரணத்தால் மணல் விற்பனை வருமானம் ரூபா 13.2 மில்லினால் மிகையாக கணக்கிடப்பட்டிருந்ததால் ஆண்டின் இலாபமும் அப் பெறுமானத்தால் மிகையாக கணக்கிடப்பட்டிருந்தது. | கணக்கீட்டு தவறொன்று ஏற்பட்டுள்ளது. இந்த தவரிற்கான சீராக்கம் 2021 ஆண்டில் செய்யப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | புணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது கூட்டுத்தாபனத்தினால் Waste to Wealth (pvt) Ltd பெயரில் புதிய துணை கம்பனியொன்றை ஆரம்பிக்க 2019 நவம்பர் 04 திகதி வழங்கியிருந்த ரூபா 5 மில்லியன் ஆரம்ப முதலீட்டு தொகையிலிருந்து மீளாய்வாண்டின் ஜுன் 01 திகதி கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளை இடைநிறுத்தம் | இதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் ரூபா 5 மில்லியன் தொகையை கூட்டுத்தாபனம் வழங்கப்பட்டதுடன், பிற்பட்ட காலத்தில் ஏற்பட்ட கொள்கை ரீதியான மாற்றம் காரணமாக, அக் கம்பனியை முன்கொண்டு செல்ல வேண்டிய தேவைபாடொன்று இல்லாததால், அச் சந்தர்ப்பத்தின் போது கம்பனியிடம் காணப்பட்ட | கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்படாத கிடைக்க வேண்டிய மீதியை சரியான அங்கீகாரத்துடன் கணக்குகளிலிருந்து அகற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யும் போது அறவிட வேண்டியிருந்த ரூபா 2.46 மில்லியனான பணத்தை அறவிட முடியாத நிலைமை ஒன்றினுள், அப் பெறுமதியை கூட்டுத்தாபன நிதிக்கூற்றுக்களில் நடைமுறை சொத்துக்களின் கீழ் வைப்பு மற்றும் முற்செலுத்தலாக காட்டியிருந்தமையால் கூட்டுத்தாபன நடைமுறை சொத்துக்கள் அப்பெறுமானத்தால் மிகை கணக்கிடப்பட்டிருந்தது. | தொகை கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட்டது. எஞ்சிய தொகையை கம்பனியால் செலவிடப்பட்டிருந்ததால் ரூபா 2.46 மில்லியன் அளவான தொகையை குறித்த அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் செலவினமாக கணக்கு புத்தகங்களிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஏ) | ரூபா 16.24 மில்லியன் செலவில் சேதனப் பசளை உற்பத்திக்காக நிர்மாணிக்கப்பட்ட (leachate Collection pit for Windrow pad of Waste Park Kerawalapitiya) நிர்மாணம் 2020 சனவரி மாதமளவில் சேதனப் பசளை உற்பத்தி நடவடிக்கைக்காக பயன்படுத்தியிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதியிலும் அது நடைமுறை மூலதன வேலைகளின் கீழ் தொடர்ந்தும் காட்டப்பட்டிருந்தது. | தங்களின் அவதானிப்புடன் உடன்படுகிறேன். குறித்த மூலதனமாக்கல் 2021 ஆண்டில் மேற்கொள்ளப்படும். | நிர்மாண நடவடிக்கைகள் சரியாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | 2017 ஆண்டில் தியத உயன புகையிரத சிற்றுண்டிச்சாலையை அபிவிருத்தி செய்வதற்காக கூட்டுத்தாபனத்திற்கு வோர்டர்ஸ் எஜ் நிறுவனத்திலிருந்து 3 வருட காலமாக அறவிட வேண்டியிருந்த ரூபா 88.42 மில்லியன் மற்றும் அதற்கான ரூபா 33.64 மில்லியன் வட்டியையும் மீளாய்வாண்டு இறுதி வரை அறவிட்டிருக்காததுடன் 2022 சனவரி மாதம் வரையும் கூட்டுத்தாபனம் மற்றும் வோர்டர்ஸ் எஜ் நிறுவனத்திற்கிடையில் எவ்வித ஒப்பந்தமும் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனினும் கூட்டுத்தாபனத்தால் 2018 ஆண்டு முதல் கணக்கீடு செய்துள்ள அறவிட வேண்டிய பணத்தின் மீது கணக்கிட்டிருந்த ஈட்டிக்கொள்ளாத வட்டி வருமானம் காரணத்தால் கூட்டுத்தாபனத்தின் திரண்ட இலாபம் ரூபா 22.39 மில்லியனால் மிகை கணக்கிடப்பட்டிருந்தது. | இது தொடர்பாக உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக் கொள்ள பல சந்தர்ப்பங்களில் எழுத்து மூலம் உத்தேசித்துள்ள போதும் அந் கம்பனியால் திட்டவட்டமான உடன்பாடு இல்லாததால் இதுவரை உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள முடியாதுள்ளது. வோட்டர்ஸ் எஜ் நிறுவனத்துடன் தவணை கொடுப்பனவு உடன்படிக்கையொன்றிற்கு உட்பட பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், எதிர்காலத்தில் இந்த நிலுவை பெறுமதியை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். வோட்டர்ஸ் எஜ் நிறுவனத்திலிருந்து கிடைக்க வேண்டிய பணம் கிடைக்கும் எனும் நம்பிக்கையில் அட்டுறு அடிப்படையில் 2017,2018 மற்றும் 2019 ஆண்டுகளில் | அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது சரியான உடன்படிக்கைகளுக்கு உட்பட நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் திட்டவட்டமாக பெற்றுக் கொள்ள முடியுமான வருமானத்தை மாத்திரம் கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | குறித்த வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனினும் தவணை கொடுப்பனவு உடன்படிக்கைக்கு உட்பட்ட பின்னர் கணக்கீடு செய்யப்பட்டுள்ள வட்டி வருமானம் மாற்றமடைவது தொடர்பாக தேவையான செம்மையாக்கல் செய்யப்படுமென உரிய அலுவலர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஓ) | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 4,032.85 மில்லியனான கிடைத்த முற்பண மீதியினுள் உள்ளடங்கியுள்ள நடைமுறை, தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ள அல்லது இடைநடுவே நிறுத்திய 17 வாடிக்கையாளர் கருத்திட்டங்களின் மற்றும் ஒரு மதியுரை சேவை வழங்கலிற்குரிய கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்த வேலை ஆயத்த முற்பணம் ரூபா 370.09 மில்லியனான மீதியில் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 111.5 மில்லியன் 2 – 3 வருட காலமாகவும், ரூபா 5.8 மில்லியன் 3 –4 வருட காலத்திற்கிடையிலும், ரூபா 52.10 மில்லியன் 5 வருட காலத்தை விஞ்சிய காலமாகவும் நிலவியதுடன், குறித்த செயற்பாட்டை பூர்த்தி செய்த பின்னர் பட்டியல்களிற்கு பணம் கிடைக்கும் போது மற்றும் முற்பணத்தை அறவிடும் போது அந்த அந்த வருட வருமானத்திற்கு கணக்கீடு செய்யாது தொடர்ந்தும் கிடைத்த முற்பணமாக காட்டப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டு இறுதியில் நிலவிய வாடிக்கையாளர் கருத்திட்டங்களிற்கான ஆயத்த முற்பணமான 370.09 மில்லியன் தொடர்ந்தும் தீர்க்கப்படாத அல்லது தொடர்ந்தும் நடைமுறை கருத்திட்டங்களிற்கான மீதிகளாகும் என உறுதி செய்கிறேன். பட்டியல்கள் சமர்பிக்கப்பட்ட போதும் இன்னும் வேலைகள் உறுதிப்படுத்தப்படாத சில கருத்திட்டங்கள் மற்றும் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ள சில கருத்திட்டங்களும் அதனுள் உள்ளடங்குகின்றன. குறித்த செயற்பாடுகளை பூர்த்தி செய்த பின்னர் பட்டியல்களிற்கு பணம் கிடைக்கும் போது மற்றும் முற்பணம் அறவிடுகையில் அந்த அந்த ஆண்டு வருமானத்திற்கு கணக்கீடு செய்யாது தொடர்ந்தும் கிடைத்த முற்பணமாக பேணப்படும் எந்தவித மீதியும் இதனுள் உள்ளடங்கவில்லை. எவ்வாறாயினும் 2021 ஆண்டிறுதியில் இம் மீதிகளை தீர்த்து முடிவுறுத்தப்பட்டுள்ளது. 5 ஆண்டுகளை விஞ்சிய மீதிகளாக நிலவிவரும் 52.10 மில்லியனான தொகை தொடர்ந்து தீர்க்கப்படாது நிலவுவது இடைநடுவே நிறுத்திய பெலியத்த நகர அபிவிருத்தி கருத்திட்டத்திற்குரிய முற்பணமாகும். இது தொடர்பாக இதுவரை இருதரப்பினருக்கும் இடையில் | நிறைவேற்ற வேண்டிய ஒப்பந்தங்களை விரைவில் பூர்த்தி செய்து நீண்ட காலமாக நிலவும் முற்பணத்தை விரைவில் தீர்க்க வேண்டும். |

உடன்பாட்டிற்கு வராததால் தொடர்ந்தும் தீர்க்கப்படாது நிலவுகின்றது.

### 1.5.5 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கை பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன | ரூபா மில்லியன | ரூபா மில்லியன | | |
| (அ) | கடன் கொடுனர் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய செலவினம் | 1,290.9 | 1,354.9 | 64.0 | விரிவான கணக்கறிக்கை மற்றும் வருடாந்த அறிக்கைக்கிடையில் கடன் கொடுனர் மீதியின் வித்தியாசம் ரூபா 65 மில்லியன் ஆனது. இவ் வித்தியாாசத்திற்கு காரணம் வருடாந்த அறிக்கையை சமர்பிக்கும் போது தவறுதலாக வியாபார கடன்கொடுனர்களுக்கு செலுத்திய ரூபா 65 மில்லியன் முற்பணம் தொகையை வியாபார கடன்கொடுனர் மீதியுடன் செம்மையாக்கி தேறிய பெறுமதி காட்டப்பட்டுள்ளமையாகும். | கணக்கு மீதிகள் நேரொத்த அறிக்கை யுடன் ஒத்ததாக வேண்டும். |
| (ஆ) | பொது வைப்புக்கள் மற்றும் பாதுகாப்பு வைப்பு மீதினுள் உள்ளடங்கிய செயலாற்றல் பிணைமுறி பெறுமதி | 23.48 | 27.40 | 3.92 | செலுத்த வேண்டிய உரிமை பங்கிற்கான செலவின கணக்கு தொடர்பாக மீளாய்வாண்டினுள் இடம்பெற்றுள்ள தவறு மற்றும் விடுபடல் இவ் வருடத்தினுள் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு மீதிகள் நேரொத்த அறிக்கை யுடன் ஒத்ததாக வேண்டும். |
| (இ) | பேரே வாவியை சுத்திகரிக்கும் கருத்திட்டத்திற்கு உரியதான பூர்த்தி செய்த | 46.88 | 47.96 | 1.08 | பதில் வழங்கப்படவில்லை | கணக்கு மீதிகள் நேரொத்த அறிக்கை யுடன் |

| | | |
|---|---|---|
| வேலை பெறுமதி | | ஒத்ததாக வேண்டும். |

**1.5.6 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் இல்லாதத காரணத்தால் பின்வரும் விடயங்கள் போதியளவு சான்றுறுதிப்படுத்த முடியாமலிருந்தது. | கருத்து முன்வைக்கவில்லை. | கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்கள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | விடயம் | தொகை ரூபா மில்லியன் | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| (i) | மீள் செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 4.27 | வைப்புத் திகதி மற்றும் குறித்த ஒப்பந்ததாரரின் (கருத்திட்ட) விபரம் மற்றும் செயல்கள உள்ளிட்ட அட்டவணையொன்று |
| (ii) | ஆயத்த முற்பணம் | 1.12 | நுவரஎலிய பம்பர கெலே வீடுமைப்பு கருத்திட்டத்திற்காக வழங்கிய முற்பணத் தொகையை செலுத்திய திகதி மற்றும் பெறுபவரின் பெயர் |
| (iii) | ERP தொகுதி | 4.60 | S/197/17 கொண்ட பெறுகை தொடர்பாக தெரிவு செய்யப்பட்ட விலை மனுதாரரின் விலை மனு ஆவனங்கள் மற்றும் அதற்காக கொள்வனவு செய்யப்பட்ட கணனி மற்றும் டொங்கள் உள்ளிட்ட உபகரணங்கள் தொடர்பான விரிவான பதிவேடொன்று |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட வாகனங்களுக்கான கொடுப்பனவு | 9.32 | வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட வாகனங்கள் தொடர்பான விபரங்கள் உள்ளிட்ட அட்டவணை. | |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வவுசர்கள் உரிய படிவத்தில் சரியாகவும் பூர்தியாகவும் நிரப்பி தயாரித்து அனைத்து கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட ரூபா 15,794,198 பெறுமதியான 04 வவுசர்கள் எவ்வித அங்கீகாரமுமின்றி மற்றும் கொடுப்பனவை உறுதிப்படுத்தும் ஆவனங்கள் இணைப்பு பதிவேடுகள் இல்லாமை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கருத்து முன்வைக்கவில்லை. | கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்கள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் 4-5 வருட இடைலான காலமொன்று முதல் அறவிட வேண்டியதாக இருந்த கடன்படுனர் மீதி ரூபா 44.04 மில்லியனானதுடன் 05 ஆண்டுகளை விஞ்சிய கடன்படுனர் மீதி ரூபா 163.21 மில்லியன் ஆனது. அக் கடன்படுனர் மீதினுள் உள்ளடங்கிய “சுது நெலும் புற வீடுகள்” கருத்திட்டத்தின் வீடு கிடைத்தவர்களிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு பெற வேண்டிய ரூபா 28.55 மில்லியனான தொகைக்காக மேற்கொள்ளப்பட்ட ஐயக்கடன் ஏற்பாடு ரூபா 28.43 மில்லியனானது. அவ்வாறே வாடிக்கையாளர் கருத்திட்டங்களிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 607.35 மில்லியன் தொகையிலிருந்து ரூபா 40.92 மில்லியன் 4-5 ஆண்டுகள் இடைலான காலமொன்று முதலும் ரூபா 136.25 மில்லியன் 5 ஆண்டுகளை விஞ்சிய காலமொன்று முதலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கூட்டுத்தாபனத்தினால் கணக்காய்விற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்படுனர் மீதி உறுதிப்பாடுகளின் பெறுமதி ரூபா 1,134.86 மில்லியனானதுடன் அவற்றின் | மீளாய்வாண்டு நிதிக்கூற்றினுள் உள்ளடங்கிய 4-5 ஆண்டுகள் இடைளான காலம் முதல் அறவிட வேண்டியதாக நிலவிய கடன்படுனர் மீதி ரூபா 44.04 மில்லியனானதுடன் அவற்றில் ரூபா 41 மில்லியன் 2021 ஆண்டு இறுதி அளவில் அறவிடப்பட்டுள்ளது.<br>05 ஆண்டுகளை விஞ்சிய கடன்படுனர் மீதி ரூபா 163.21 மில்லியன் ஆனதுடன் அவற்றின் ரூபா 26 மில்லியன் மேலும் அறவிட வேண்டிய நிறுத்தமானதுடன் அவற்றில் பெரும் பகுதியொன்று அறவிட முடியாத நிலையில் உள்ளது. அதற்காக தேவையான ஐக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>இன்னும் ரூபா 136 மில்லியன் அளவான கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்களிற்குறியதானதுடன் அவற்றின் ரூபா 34 மில்லியன் 2021 ஆண்டினுள் தீர்கப்பட்டுள்ளது. இன்னும் ரூபா 75.76 அணு வழுசக்தி அதிகாரசபைக்காக மேற்கொள்ளப்பட்ட | கூட்டுத்தாபனம் பெற வேண்டிய தொகையை கடினமாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எவ்வித கடன்படுனர் மீதியொன்று கணக்காய்விற்கு உறுதிப்படத்திருக்கவில்லை. | கருத்திட்டத்திற்குறியதானதுடன் எஞ்சியவை அறவிடல் நிச்சியமற்றது. இதற்காகவும் ஐக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாட்டில் நிலவும் தொற்று நோய் நிலைமையும் கொடுப்பனவு தாமதமாக காரணமானது. கூட்டுத்தாபனத்தின் காணி பிரிவு மற்றும் சட்ட பிரிவு நிலுவை தொகை அறவிடல் மற்றும் சட்ட ரீதியான செயல்முறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தினால் குத்தகைக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டிருந்த 15 காணி துண்டுகளுக்காக இடம்பெற்ற மதிப்பீடு நடவடிக்கைக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 3.71 மில்லியனான மதிப்பீட்டு கட்டணம் குத்தகை காரரிடமிருந்து 1-5 ஆண்டுகள் இடைலான காலமொன்று முதல் அறவிட வேண்டிய போதும் மீளாய்வாண்டு இறுதி வரையும் அச் செயற்பாடுகளை பூர்த்தி செய்து அத் தொகையை அறவிட கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கூட்டுத்தானத்தினால் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த காணிகளுக்காக கொள்வனலாரரிடமிருந்து அறவிட வேண்டிய மதிப்பீடு கட்டணம் இப்போது அறவிடப்பட்டுள்ளதுடன் பெரும்பாலான குத்தகை வழங்கள் இப்போது முடிவுறுத்தப்பட்டுள்ளது. | குறித்த செயற்பாடுகள் செயற்திறனாக பூர்த்தி செய்து கூட்டுத்தாபனத்திற்கு அறவிட வேண்டிய பணம் கடினமாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1,436.96 ஆன செலுத்த வேண்டிய வியாபார மற்றும் ஏனைய மீதி தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகளின்றன. | | |
| (i) | மீளாய்வாண்டு இறுதி வரை மீள் செலுத்த வேண்டிய டென்டர் வைப்பு கணக்கில் மீதியான ரூபா 42.88 மில்லியனிலிருந்து ரூபா 8.45 மில்லியன் மீதியொன்று 2-3 ஆண்டு காலமொன்று முதலும் ரூபா 3.75 மில்லியன் 3-4 ஆண்டு காலமொன்று முதலும் ரூபா 2.79 மில்லியன் 4-5 ஆண்டு காலமொன்று முதலும் ரூபா 8.1 மில்லியன் 5 ஆண்டுகளை விஞ்சிய காலமொன்று முதலும் நிலவியதுடன் இது தொடர்பாக நி.பி 570 மற்றும் 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்க கூட்டுத்தாபனம் செயற்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் உடன்படுகிறேன். காலம் கடந்துள்ள பிணை வைப்பு பணத்தை நி.பி.570 மற்றும் நி.பி.571 பிரகாரம் வருமானமாக கருத்திற்கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டுத்தாபனத்தினால் செலுத்த வேண்டிய பணம் கடிணமாக செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ii) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணிகளை குத்தகைக்கு வழங்குதல் அல்லது விற்பனைக்காக மதிப்பிடல் செய்வதற்காக கொள்வனவாளரிடமிருந்து அறவிடப்பட்ட எனினும் மதிப்பீட்டு திணைக்களத்திற்கு மீளாய்வாண்டு இறுதிவரையும் செலுத்தப்படாத மதிப்பீட்டு கட்டணம் ரூபா 8.19 மில்லியனானதுடன் அவற்றின் ரூபா 0.279 மில்லியன் 2-3 வருட காலத்திலிருந்தும் ரூபா 6.582 மில்லியன் 4-5 வருட காலத்திலிருந்தும் ரூபா 0.441 மில்லியன் 5 வருடத்திக்கு அதிக காலத்திலிருந்தும் செலுத்த வேண்டியதாக காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கூட்டுத்தாபனத்தினால் செலுத்த வேண்டிய பணம் விரைவில் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | உறுதி பதிவிடலிற்கு வாடிக்கையாளர்களிடமிருந்து முத்திரை கட்டணம் அறவிடப்பட்டிருந்த பொதும் மீளாய்வாண்டு இறுதி வரையும் உரிய குத்தகை உடன்படிக்கை கைச்சாதிடாத காரணத்தால் 2006 ஆண்டு முதல் நிலவிய ரூபா 10.4 மில்லியனான முத்திரை வரி உரிய தரப்பினரிற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காது மீளாய்வாண்டு வரை ஏனைய செலுத்த வேண்டிய செலவினத்தின் கிழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உறுதி பதிவிடலிற்கான முத்திரை கட்டணம் கூட்டத்தாபனத்திற்கு கிடைத்து இன்னும் செலுத்தாத மீதி ரூபா 10.4 மில்லியன் தொகையாக மீளாய்வாண்டு இறுதியில் நிலவிய மீதிகள் பெரும்பாளும் இன்னும் உடண்படிக்கை கைச்சாத்திடப்படாததாகும். இந்த பணத்தை செலுத்தி கனிசமான காலமொன்று கடந்த போதும் உடன்படிக்கை கைச்சாத்திடாமை மற்றும் உடன்படிக்கை காலமும் கடந்துள்ளதால் தொடரந்தும் மீதிகளை பேணிக் கொள்ளத் தேவையில்லாததால் எதிர்வரும் ஆண்டில் அதற்கு தேவையான செம்மையாக்கல்களை செய்ய இணங்குகிறோம். | கூட்டுத்தானத்தினால் சட்ட விதிகளின் பிரகாரம் செலுத்த வேண்டிய குத்தகை பணத்தை செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | ரூ. 924.85 மில்லியனான ஒப்பந்த கடன்கொடுனர் மீதியில் உள்ளடங்கியுள்ள ரூ. 381.6 மில்லியன் பெறுமதியான 2 – 5 ஆண்டுகளிற்கு இடையிலான காலமாக தீர்க்கப்படாத கடன்கொடுனர் மீதி ரூபா 57.25 மில்லியனானதுடன் 5 ஆண்டுகளை விஞ்சிய மீதி ரூபா 2.27 மில்லியனானது. | மீளாய்வாண்டு இறுதியில் நிலவிய 2 – 5 ஆண்டுகளாக தீர்க்கப்படாத ஒப்பந்த கடன்கொடுனர்களின் பெறுமதி ரூபா 59.3 மில்லியனானதுடன் அவற்றில் ரூபா 15.4 மில்லியன் அளவை 2021.03.31 திகதியளவில் தீர்த்திருந்ததுடன் 2022.03.31 திகதியளவில் தீர்த்துள்ள அளவு ரூபா 80.3 மில்லியனாகும். விஷேடமாக இதில் உள்ளடங்குவது ஒப்பந்ததாரர்களின் நிறுத்தற் பணமாகும். மேலும் மெதமுலன | கூட்டுத்தானத்தினால் செலுத்த வேண்டிய பணத்தை விரைவில் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஞாபகார்த்த சிலை கருத்திட்டத்திற்குரிய கொடுப்பனவை சட்ட நிலைமை காரணமாக விடுவிக்காததால் அதுவும் இதில் உள்ளடங்குகிறது. இத் தொகையை விடுவிக்க முடியுமென சட்டமா அதிபர் திணைக்களத்தினால் 2022.03.22 திகதிய கடிதம் மூலம் அறிவித்துள்ளதால் ரூபா 9.25 மில்லியன் அளவான தொகையை விடுவிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் கம்பனியில் காணப்பட்ட ரூபா 45.22 மில்லியன் வியாபார கடன்கொடுனர் மீதி உறுதிப்பாட்டிற்காக 13 கடிதங்கள் மூலம் மீதி உறுதிப்பாட்டை கோரியிருந்த போதும் அவற்றில் ரூபா 10.10 மில்லியனான 3 கடன்கொடுனர் செலவு மீதிகள் மற்றும் ரூபா 15.2 மில்லியன் கடன்கொடுனர் வரவு மீதிகள் தொடர்பாக கணக்காய்விற்கு 4 மீதி உறுதிப்பாட்டு கடிதங்கள் மாத்திரம் கிடைத்திருந்தன. அவற்றில் 2 மீதிகள் கூட்டுத்தாபன மீதிகளுடன் இணங்கியிருந்ததுடன் ரூபா 15.2 மில்லியன் கடன்படுனரில் கீழான வரவு மீதி கடன்கொடுனரினால் நிராகறிக்கப்பட்டிருந்தன. அவ்வாறே ஒரு மீதி ரூபா 0.43 மில்லியனால் கூட்டுத்தாபன தரவுகளுடன் இணங்காதிருந்தது. | ரூபா 6.46 மில்லியன் கடன்கொடுனர் மீதி Ceylon Steel Corporation நிறுவனத்தால் ரூபா 6.46 மில்லியனிற்கான காசோலை பெறப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ரூபா 0.43 மில்லியனினால் கூட்டுத்தாபன கணக்கு மீதியுடன் இணங்காதிருந்ததை ஏற்க முடியாதுள்ளது.<br>ரூபா 15.2 மில்லியனான கடன்கொடுனர் மீதி Analytical Instruments Pvt Ltd நிறுவனத்திற்கு பேரே வாவி கருத்திட்டத்திற்காக Booster Pump ஒன்றை கொள்வனவு செய்ய வழங்கிய 20% முற்பணமாவதுடன் அதனை 2019.09.30 திகதிய 316719 காசோலை மூலம் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டுள்ளது. அதனால் Analytical Instruments (Pvt) Ltd நிறுவனத்தினால் இதனை நிராகறித்திருப்பது தாமதத் தவறொன்றினால் ஆக முடியும். | கூட்டுத்தாபன கணக்குகளுடன் இணங்காமைக்கான காரணம் தொடர்பாக பரிசோதித்து சீராக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் கூட்டுத்தாபன துணைக் கம்பனியொன்றான காணி நிரப்பல் மற்றும் அபிவிருத்தி செய்யும் கம்பனியிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டியதாக கூட்டுத்தாபன நிதிக்கூற்றுக்களில் ரூபா 564.90 | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | துணை கம்பனியுடன் காணப்படும் கொடுக்கல் வாங்கல்களை சரியாக |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் தொகை காட்டப்பட்ட போதும் கம்பனியின் ஏடுகளின் படி அது ரூபா 562.78 மில்லியனாகும். அதன் பிரகாரம் ரூபா 2.12 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அக் கம்பனிக்கு செலுத்த வேண்டியதாக கூட்டுத்தாபன நிதிக்கூற்றுக்களில் ரூபா 57.72 மில்லிளன் தொகை காட்டப்பட்ட போதும் அக் கம்பனி கணக்குகளில் கூட்டுத்தாபனத்தில் இருந்து பெற வேண்டியதாக ரூபா 68.29 மில்லியன் தொகை காட்டப்பட்டிருந்ததுடன் அங்கு ரூபா 10.57 மில்லயன் வித்தியாசம் நிலவியது. | | பேணிக்கொள்ள வேண்டும். |
| (ஆ) | | | |
| (i) | நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கிய தொடர்புடைய தரப்பினரிடமிருந்து கிடைக்க வேண்டிய குருங்கால பெறுவனவான ரூபா 383.10 மில்லியனுள் உள்ள காணி நிரப்பல் மற்றும் அபிவிருத்தி செய்யும் கம்பனியின் சம்பள கொடுப்பனவுக்காக கூட்டுத்தாபனத்தால் முற்பணமாக 2019 ஒக்டோபர் 30 திகதியளவில் வழங்கியிருந்த ரூபா 40 மில்லியன் தொகையை மீளாய்வாண்டு இறுதியிலும் தீர்க்க கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இத் தொகையை காணி நிரப்பல் மற்றும் அபிவிருத்தி செய்யும் கம்பனியிற்கு எதிர்காலத்தில் செலுத்தவுள்ள தொகையிலிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | துணை கம்பனியுடன் காணப்படும் கொடுக்கல் வாங்கல்களை சரியாகவும் காலரீதியாகவும் பேணிக்கொள்ள வேண்டும். |
| (ii) | கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளும் நிர்மாணத்தின் கீழ் காணி நிரப்பல் மற்றும் அபிவிருத்தி செய்யும் கம்பனியிற்கு 2008, 2011 ,2017 மற்றும் 2019 ஆண்டுகளில் வழங்கியிருந்த துணை ஒப்பந்த உடன்படிக்கை பிரகாரம் கூட்டுத்தாபனம் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளிற்காக 5 ஒப்பந்தங்களிற்குரிய ஆரம்ப முற்பணமாக வழங்கிய ரூபா 4.89 மில்லியனிலிருந்து ரூபா 2.37 மில்லியனை காணி நிரப்பல் மற்றும் அபிவிருத்தி செய்யும் கம்பனிக்கு வழங்கி 3 ஆண்டுகளை விஞ்சிய காலமொன்று கடந்திருந்த போதும் மீளாய்வாண்டிளேனும் அத் தொகையை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இங்கு வேரஸ் ஆற்று கருத்திட்டத்தின் மூலம் காணி நிரப்பல் மற்றும் அபிவிருத்தி செய்யும் கம்பனி ஒப்பந்த முற்பண பெறுமதி ரூபா 2.75 மில்லியனாவதுடன் அந்த சூரிய மல் மாவத்த சூரிய ஒளி கருத்திட்டம் செயற்படாததால் ரூபா 2.75 மில்லியன் முற்பணத்தை கோரி கடிதம் அனுப்பியுள்ள போதும் இன்னும் அத் தொகையை அறவிட முடியாதுள்ளது. எதிர்காலத்தில் அத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | துணை கம்பனியுடன் காணப்படும் கொடுக்கல் வாங்கல்களை சரியாக பேணிக்கொள்ள வேண்டும். |
| (iii) | கூட்டுத்தாபனத்தால் காணி நிரப்பல் மற்றும் அபிவிருத்தி செய்யும் கம்பனியிற்கு வாடகை அடிப்படையில் வழங்கிய காணி மற்றும் | இலங்கை காணி நிரப்பல் மற்றும் அபிவிருத்தி செய்யும் கம்பனியிற்கு வாடகை அடிப்படையில் வழங்கிய காணி | காணப்படும் கொடுக்கல் வாங்கல்களை சரியாக மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிடத்திற்காக 2003 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை அறவிட வேண்டிய ரூபா 8.06 மில்லியன் தொகையை மீளாய்வாண்டு இறுதி வரையும் அறவிட கூட்டுத்தாபனத்திற்கு இயலாதிருந்தது. | மற்றும் கட்டிடத்திற்காக 2003 ஆண்டு முதல் 2012 ஆண்டு வரை அறவிட வேண்டிய நிலுவை குத்தகையை செலுத்த நடவடிக்கை எடுக்குமாறு அந் நிறுவனத்திற்கு அறிவித்துள்ளதுடன் அக் கம்பனியின் சீரற்ற நிதி நிலைமை காரணமாக இதுவரை அந் நிலுவை தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்கவில்லை. 2012 ஆண்டு முதல் 2021 திசெம்பர் மாதம் வரை குறித்த மாதாந்த குத்தகை தொகை அக் கம்பனியினால் தீர்க்கப்பட்டுள்ளது. | காலரீதியாக பேணிக்கொள்ள வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் கூட்டுத்தாபன நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் கிடைக்க வேண்டிய ஆயத்த முற்பண மீதி ரூபா 4.87 மில்லியனான போதும் காணி நிரப்பல் மற்றும் அபிலிருத்தி செய்யும் கம்பனியின் நிதிக்கூற்றுககளின் பிரகாரம் செலுத்த வேண்டிய ஆயத்த முற்பண மீதி ரூபா 4.4 மில்லியனானதில் அதற்கிடையில் ரூபா 0.47 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | துணை கம்பனியுடன் காணப்படும் உள்ளக கொடுக்கல் வாங்கல்களை சரியாக பேணிக்கொள்ள வேண்டும். |
| (ஈ) | கடல் மணல் பொதியிடும் கருத்திட்டத்திற்காக துணைக் கம்பனியான காணி நிரப்பல் மற்றும் அபிவிருத்தி செய்யும் கம்பனியிற்கு 2019 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை வழங்கிய கடன் தொகையிலிருந்து மீளாய்வாண்டு இறுதிவரை கூட்டுத்தாபனத்திற்கு அறவிட வேண்டிய மொத்த தொகை ரூபா 479.21 மில்லியனானதுடன் அவற்றிலிருந்து எவ்வித தொகையும் இதுவரை கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்படவில்லை. அவ்வாறே சந்தை கேள்வி ஏற்படாதன் மீது இடைநிறுத்தப்பட்ட இக் கருத்திட்டத்திற்காக துணைக் கம்பனியிடமிருந்து அறவிட வேண்டிய தொகையை அக் கம்பனிக்கு சொந்தான காணி மற்றும் கட்டிடங்களை வேறு கம்பனியொன்றிற்கு விற்பனை செய்து அதிலிருந்து கிடைக்கும் தொகையிலிருந்து அறவிட 2019 ஜூன் மாதம் தீர்மானித்திருந்த போதும் மீளாய்வாண்டு இறுதி வரையும் இந் நடவடிக்கையை தீர்த்திருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான முத்துராஜவெலயில் அமைந்துள்ள காணியில் (திட்ட இலக்கம். 370/SLLRDC) ரெடெகோ நிறுவனத்தால் கடல் மணல் பொதியிடுவதற்காக நிர்மாணிக்கப்பட்ட 200 m x 30 m அளவிளான கட்டிடத்தை, லிட்ரோ கேஸ் இலங்கை கம்பனியுடன் ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் 2021.06.14 திகதி அக்கம்பனிக்கு எழுத்து மூலம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>அதன் பிரகாரம், கூட்டுத்தாபனம் மற்றும் கம்பனிக்கிடையிலான உள்ளக கணக்குகளில் மேற்கொள்ளும் செம்மையாக்கல் மூலம் ரூபா 326,390,000/- பெறுமதியால் கம்பனி பொறுப்புக்களிலிருந்து விடுவிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன். | கம்பனியை குறித்த பொறுப்பிலிருந்து விடுவிக்க விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i) நி.பி 371 (2) (ஆ) | (i) பிரமாணங்களிற்கு மாற்றமாக மீளாய்வாண்டில் 29 சந்தர்ப்பங்களில் ரூபா 100,000 விஞ்சி கூட்டுத்தொகை ரூபா 10,344,835 ஆன நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே நிதி எல்லைகளை மீறி கொடுப்பனவு செய்ய திறைசேரியின் முன்கூட்டிய அனுமதியை பெற்றுக் கொள்வதாக முன்னைய ஆண்டு கூட்டுத்தான தவிசாளரினால் பதில் வழங்கியிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதி வரையும் அவ்வாறான அனுமதியொன்று பெற்றிருக்கவில்லை. | தங்களின் அவதானிப்புடன் உடன்படுகிறேன். எனினும் தற்போது இக் கூட்டுத்தாபனம் நிறைவேற்றும் கடமைகளுக்காக இந்த ரூபா 100,000/- நிமித்த உப கட்டுநிதி எவ்விதத்திலும் போதாமையால், அப் பெறுமதியை ரூபா 200,000/- வரை அதிகரித்துக் கொள்ள பணிப்பாளர் சபை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. எவ்வாறாயினும், இந்த நிதி எல்லையின் தேவைப்பாட்டை பொது திறைசேரிக்கு சமர்பித்து அதன் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு உரிய அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | | (ii) மீளாய்வாண்டில் 60 சந்தர்ப்பங்களில் அலுவலர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 6,370,980 ஆன உப கட்டுநிதியை தீர்க்க 35 நாட்கள் முதல் 350 நாட்கள் வரையான காலமொன்று கடந்திருந்தது. அவ்வாறே கூட்டுத்தாபனத்தினால் | கொரோனா தொற்று காரணமாக விதிக்கப்பட்ட பிரயாணத் தடை காரணமாக உப கட்டுநிதி முற்பணத்தை தீர்ப்பது 2020 ஆண்டினுள் தாமதமானது. அங்கு அத் தாமதத்திற்கான காரணம் அவ் வவுசர் படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| 35 சந்தர்ப்பங்களில் அலுவலர்களுக்கு வழங்கியிருந்த விஷேட முற்பணத்திலிருந்து 2020 திசெம்பர் 31 திகதியன்று மேலும் அலுவலர்களிடமிருந்து அறவிட வேணடிய ரூபா 773,726 ஆன தொகையொன்று அறவிடுவதற்கும், மேலதிகமாக செலவிட்ட அலுவலர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 76,266 தொகையை நிதி ஆண்டினுள் செலுத்தி அவற்றை செலவாக கணக்கீடு செய்து முற்பணத்தை தீர்க்கவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவ்வாறே இந்த உப கட்டுநிதியை தீர்த்தல் குறித்த காலத்தினுள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு குறித்த அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. ஆண்டிறுதியில் வழங்கிய உப கட்டுநிதி இவ்வாறு உப கட்டுநிதி கணக்கில் மீதியாக காட்டப்படுவதுடன், இந்த மீதி 2021 ஆண்டினுள் தீர்க்கப்பட்டுள்ளது. | |
| (iii) 11 சந்தர்ப்பங்களில் 8 அலுவலளர்களிற்கு வழங்கியிருந்த ரூபா 10,000 முதல் ரூபா 700,000 வரை வீச்சளவான கூட்டுத்தொகை ரூபா 1,666,480 ஆன விஷேட முற்பணதை குறித்த செயற்பாட்டுக்கு செலவிடப்படாது 01 நாள் முதல் 161 நாட்கள் கால அளவொன்று கையிருப்பில் வைத்திருந்த பின்னர் மீண்டும் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | உப கட்டுநிதியாக பெற்றுக் கொண்ட தொகையை பயன்படுத்தாது மீள் கையளிக்க காரணமான விடயங்களை மற்றும் மீள் கையளிக்க தாமதித்ததற்கு காரணமான விடயங்களை குறித்த அலுவலர்களிடமிருந்து எழுத்து மூலம் பெற்று வவுசர் படிவத்துடன் இணைத்துள்ளதாக அறிவிக்கிறேன். 2020.03.27 திகதி ரூபா 1,400,000 தொகை சிரேஷ்ட கணக்காளர் திரு ஈ.ஏ.ஏ.ஜயவர்தன விற்கு வழங்கியிருந்தது அச் சந்தர்ப்பத்தில் கொரோனா தொற்று காரணமாக நாடு மற்றும் கூட்டுத்தாபனம் மூடக்கப்பட்டிருந்ததால் அவசர செலவுகளை தீர்கும் தேவைப்பாடு ஏற்பட்டிருந்ததால் ஆகும். | நிதிப்பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) நிமித்தக் கட்டுநிதி வழங்க வேண்டியது | 2020 ஆண்டு முதல் நாட்டில் நிலவிய | நிதிப்பிரமாணங்களுக்கு இணங்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஏதேனும் விஷேட செயற்பாடுகளிற்காக ஆன போதும், கூட்டுத்தாபனத்தின் சாதாரண நடவடிக்கையான நிர்மாணம் மற்றும் ஒப்பந்த பெறுகைகள் செயன்முறையை பின்பற்றி மேற்கொண்ட கொள்வனவுகளிற்காக மீளாய்வாண்டில் 49 சந்தர்ப்பங்களில் ரூபா 7000 இற்கும் ரூபா 200,000 இற்குமிடையிலான வீச்சளவில் கூட்டுத்தொகையான ரூபா 4,693,525 ஆன நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக நாடு முடக்கப்பட்டமை, ஆளணி மட்டுப்படுத்தலின் கீழ் தடையின்றி நிர்மாண பணிகளை மேற்கொள்ளல், போன்ற காரணங்களால் சில சந்தர்ப்பங்களில் நிமித்த கட்டுநிதி பெறவேண்டி ஏற்பட்டது. அந் நிமித்த கட்டுநிதியை பெற்றுக் கொள்கையில் குறித்த அனைத்து அங்கீகாரங்களிற்கும் கீழ் அந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கிறேன். | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1982 இன் 04 இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை (திருத்திய) சட்டத்தின் 8 ஒ பிரிவு | குறித்த உள்ளூராட்சி நிறுவனத்திடமிருந்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாது 2008 ஆண்டில் கூட்டுத்தாபனத்தால் புதிய பிரதான அலுவலக கட்டிடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இதற்கான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக ரூபா 12.04 மில்லியன் கடப்பாடொன்று 2008 ஆண்டு முதல் கணக்குகளில் காட்டியுள்ள போதும் அதனை மீளாய்வாண்டு இறுதியிலும் தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | புதிய பிரதான அலுவலக கட்டிடத்திற்காக ஶ்ரீ ஜயவர்தனபுற நகர சபையின் அனுமதியை பெற்றுக் கொள்ளும் செயற்பாடு 2008 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. நகர சபையின் ஆலோசனை பிரகாரம் தீ பாதுகாப்பு திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை போன்ற நிறுவனங்களின் அனுமதியை பெற்றுக் கொள்ளவும் புதிய அளவை திட்டமொன்றை தயாரித்து அங்கீகாரத்திற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் கோரப்பட்டுள்ளன. மேற்படி செயற்பாட்டை முடிவடைந்த பின்னர் கட்டிடத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள முடியுமென அறிவிக்கிறேன். | நகர அபிவிருத்தி அதிகார சபை சட்ட ஏற்பாடுகளின் கீழ் எடுக்க வேண்டிய அங்கீகாரத்தை விரைவில் பெற்று அதற்கான கடப்பாட்டை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2017 இன் 24 இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 83 ஆம் பிரிவு | 2020 ஏப்ரல் 01 திகதி முதல் உழைக்கும் போது செலுத்தலை (PAYE) தமது சம்பளத்திலிருந்து குறைக்க விருப்பம் தெரிவிக்காத ஊழியர்களின் பட்டியலொன்றை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டிய போதும் 2020/21 மதிப்பீட்டு ஆண்டிற்காக அப் பட்டியலை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு சமர்பித்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2018 பெப்ரவரி 15 திகதிய 01/2018 இலக்க வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கையின் 9.6 பிரிவு | அரச உத்தியோகத்தர்களுக்கு தான் வகிக்கும் பதவியின் பிரகாரம் வரிச் சலுகையின் கீழ் வாகனம் பெற்றுக் கொள்ள் வழங்கியுள்ள விஷேட வரப்பிரசாதத்தின் கீழ் சலுகையிலான அனுமதிப்பத்திரத்தின் கீழ் மோடார் வாகனங்களை பெற்றுக் கொண்ட 12 அலுவலர்கள் மோடார் வாகனம் பெற்றுக் கொள்ள எடுத்த வங்கிக் கடன் தொகையின் மீளாய்வாண்டிக்குரிய வட்டியிலிருந்து, 2/3 பங்கை அதாவது ரூபா 772,284 இனை திறைசேரி அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது மாத்திரம் மீள்நிரப்பு செய்யப்பட்டிருந்தது. | இலக்கம் 01/2018 மற்றும் 2018.02.15 திகதிய வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கையின் பிரகாரம் தீர்வை வரியின்றி மோடார் வாகனம் இறக்குமதி செய்வது தொடர்பாக வழங்கியுள்ள ஏற்பாடுகளின் கீழ் கூட்டுத்தாபன ஆளணி அலுவலர்களால் தீர்வை வரியற்ற அனுமதிப்பத்திரத்தின் கீழ் மோடார் வாகனங்களை இறக்குமதி செய்ய இலங்கை வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளும் கடன் தொகையின் வட்டியிலிருந்து 2/3 அளவொன்றை பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் கூட்டுத்தாபனம் மூலம் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையில் காட்டியுள்ள ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.9 தகவல் தொழில்நுட்ப பொதுக் கட்டுப்பாட்டு முறை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 செப்தம்பர் மாதம் ஆரம்பித்து 120 நாட்களில் பூர்த்தி செய்ய எதிர்பார்த்த மற்றும் மதிபீட்டு பெறுமதி | தங்களின் அவதானிப்புடன் உடன்படுகிறேன். காணப்பட்ட பழைய மென்பொருள் | ஒப்பந்த வழங்களின் போது போதிய |

| | | |
|---|---|---|
| ரூபா 4.6 மில்லியனான நிதி, வழங்கல் மற்றும் களஞ்சிய செயற்பாடுகளுகான ERP தொகுதியொன்றை வடிவமைத்து, செயற்படுத்த மற்றும் பராமரிப்பதற்கான ஒப்பந்தம் 2017 செப்டம்பர் 18 திகதி ஒப்படைத்து மீளாய்வாண்டு இறுதியில் 03 ஆண்டுகள் கடந்திருந்த போதும் ஒப்பந்ததாரருடன் ஒழுங்கான உடன்படிக்கைக்கு உட்பட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2020 திசெம்பர் 31 திகதியன்று, இவ் ஒப்பந்தத்திற்காக ரூபா 12.97 மில்லியன் செலவிட்டிருந்த போதும் அதனூடாக எதிர்பார்த்த செயற்பாடுகளை மேற்கொள்ள முடியுமான விதத்தில் தொகுதியை வடிவமைக்க இயலாத காரணத்தால் 2020 ஆண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் செயற்பாடுகளிற்காக மீண்டும் முன்னர் பயன்படுத்திய Softlogic BPO நிறுவனத்தின் மென்பொருளையே பயன்படுத்த வேண்டியேற்பட்டிருந்தது. | தொகுதிகளுடன் புதிய ERP கணனி தொகுதி 2019/01/01 திகதி முதல் சமாந்தர தொழிற்பாட்டில் (Parallel Run) ஈடுபடுத்தப்பட்டது. எனினும் புதிய மென்பொருள் தொகுதிக்கு தரவுகளை உள்ளீடு செய்கையில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2019 மற்றும் 2020 ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்கள் பழைய மென்பொருளை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். | மதிப்பீடொன்றை செய்து அந்த சட்ட திட்டங்களின் பிரகாரம் உடன்பட்டு செலவிட்ட பணத்திற்கு உரியதாக நிறுவனத்திற்கு பயனுள்ள வகையில் பயன்படுத்த வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

நிதிக்கூறுகளின் பிரகாரம், மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் வரிக்கு முன்னைய இலாபம் ரூபா 2,500.79 மில்லியனானதுடன் அதனோடு நேரொத்த கடந்த வருடத்தின் வரிக்கு முன்னைய இலாபம் ரூபா 823.62 மில்லியனானது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் வரிக்கு முன்னைய இலாபம் ரூபா 1,677.17 மில்லியன் வளர்ச்சியொன்றை காட்டுவதுடன் மீளாய்வாண்டின் காணி விற்பனை வருமானம் மற்றும் நகர விவசாய மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி கருத்திட்ட வருமானம் முறையே ரூபா 2,233.78 மில்லியனால் மற்றும் ரூபா 173.96 மில்லியனால் அதிகரித்தமை, மற்றும் விற்பனை கிரயம் கடந்த ஆண்டைவிட ரூபா 1,082.93 மில்லியனால் குறைவடைந்தமை இந்த வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தின் முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாகவிருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவுப் போக்குகளின் பகுப்பாய்வு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கிய தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் கடந்த நான்கு வருடங்களுக்குரியதாக நிறுவனத்தின் நிதி விளைவுகள் மதிப்பிடும் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| வருடம் | 2020<br>ரூபா<br>மில்லியன் | 2019<br>ரூபா<br>மில்லியன் | 2018<br>ரூபா<br>மில்லியன் | 2017<br>ரூபா<br>மில்லியன் | 2016<br>ரூபா<br>மில்லியன் |
|---|---|---|---|---|---|
| விற்பனை | 4,987 | 3,789 | 4,730 | 4,125 | 2,181 |
| அரச பங்களிப்பு மற்றும் ஏனையவை | 2,379 | 2,787 | 2,367 | 2,969 | 5,630 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ------------ | ------------ | ------------ | ------------ | ------------ |
| | 7,366 | 6,576 | 7,097 | 7,184 | 7,811 |
| நேரடி செலவினம் | 3,599 | 4,682 | 4,500 | 4,966 | 5,603 |
| | ------------ | ------------ | ------------ | ------------ | ------------ |
| மொத்த இலாபம் | 3,767 | 1,894 | 2,597 | 2,218 | 2,208 |
| வரிக்கு முன்னைய இலாபம்/ (நட்டம்) | 2,501 | 824 | 1,620 | 1,386 | 1,477 |

(அ) கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி வருமானம் 17 சதவீதத்தினால் குறைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த வருமானத்தின் 68 சதவீதம் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தும் மற்றும் 32 சதவீதம் அரச மானியங்களிலிருந்தும் ஈட்டப்பட்டிருந்தன.

(இ) கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் விற்பனை மற்றும் விநியோக செலவினம் ரூபா 77.12 மில்லியனிலிருந்து ரூபா 142.89 மில்லியன் வரை 85 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 138.69 மில்லியன் ஐயக்கடன் ஒக்கீடு இதற்கு பிரதான காரணமாக இருந்தது.

(ஈ) கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் வருமானம் 12 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் வரிக்கு முன் இலாபம் 203 சதவிதத்தால் அதிகரித்திருந்தது.

(உ) கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் காணி நிரப்பல் மற்றும் அபிவிருத்தி செய்யும் வருமானம் மற்றும் ஒப்பந்த கருத்திட்ட வருமானம் முறையே 68 சதவீத்தினால் மற்றும் 51 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தன.

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

(அ) கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது தேறிய இலாப விகிதம் 10 சதவீதம் முதல் 34 சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன் காணி விற்பனை வருமானம் மற்றும் ஈரநில முகாமைத்துவ கருத்திட்ட வருமானம் அதிகரித்தமை இந் நிலைமைக்கு பிரதான காரணமாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் நடைமுறைப் பொறுப்புகள், மொத்த சொத்துக்களினதும் மற்றும் பொறுப்புகளினதும் சதவீதமாக முறையே 35 சதவீதம் மற்றும் 76 சதவீதம் எனும் உயர் பெறுமானத்தை கொண்டிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மெதமுளன டீ ஏ ராஜபக்ஷ ஞாபகார்த்த மத்திய நிலையத்தை நிர்மாணிப்பதற்காக மேலும் அறவிட வேண்டியதாக நீதிமன்றத்திற்கு அறிக்கையிட்டு மற்றும் கூட்டுதாபன | இக் கருத்திட்டம் தொடர்பாக நீதிமன்றத்தில் நிலவிய வழக்கிற்குரியதாக கூட்டுத்தாபனத்தால் செய்யப்பட்ட மொத்த செலவு, சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்பிக்கப்பட்டது.<br>• இந்த நிர்மாணத்திற்காக உத்தியோகபூர்வ மதிப்பீட்டு பெறுமதி | கருத்திட்டத்தை ஆரம்பிக்க முன்னர் சரியான சாத்தியப்பாட்டு ஆய்வொன்றை மேற்கொண்டு சரியான மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

கணக்குகளில் காட்டப்பட்ட பெறுமதிக்கிடையிலான வித்தியாசம் ரூபா 47.37 மில்லியனான தொகையை அக்கருத்திட்டத்திற்காக மேற்கொள்ளாத செலவாக காட்டியிருந்ததால் அம் மேலதிகமாக செலவிட்ட செலவுகள் தொடர்பாக மேலதிக பரிசோதனை மேற்கொண்டு அதற்காக பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடாது மற்றும் நி.பி 113 பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது ஏடுகளிலிருந்து பதிவழிக்க கூட்டுததாபனத்தால் நடவடிக்கை எடுத்திருந்தது.

ரூபா 33.94 மில்லியனாகும்.

- பரிசோதனை குழுவினால் சரியான பரிசோதனையிடல் மற்றும் மொத்த அளவை முறையின் பிரகாரம் (SLS 5 7 2) மற்றும் சுயமான மேற்பார்வையின் பின்னர் கணக்கிடப்பட்டிருந்த சரியான பெறுமதி ரூ. 33.84 மில்லியனாகும்.
- அரச மதிப்பீட்டு திணைக்கள தென் மாகாண அலுவலகத்தால் முன்வைக்கப்பட்ட இந் நிர்மாணப் பெறுமதி ரூ. 33.76 மில்லியனாகும்.

டீ.ஏ.ராஜபக்ஷ அமைப்பு 2017.07.13 திகதியளவில் ரூ. 33.94 மில்லியனை கூட்டுத்தாபனத்திற்கு மீள்நிரப்பியுள்ளது. இக் கருத்திட்டத்திற்காக கூட்டுத்தாபனத்தால் பின்னர் முன்வைத்துள்ள ரூபா 81.31 மில்லியன் பெறுமதியான செலவு ஆவணம் பிழை மற்றும் தவறுடன் கூடியதால், அச் செலவு ஆவணத்தை புரக்கணிக்க பரிசோதனை சபை பரிந்துரைத்துள்ளதாக அறிவிக்கிறேன். இந்த பரிந்துரை மற்றும் முடிவுகள் மேல் மாகாண நிலையான மூவர் கொண்ட உயர் நீதிமன்ற வழக்கிற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தால் மதிப்புக்குரிய நீதிமன்றத்திற்கு சமர்பித்திருந்துடன், அனைத்து விடயங்களையும் கவனத்திற் கொண்டு இந் வழக்கு நடவடிக்கையின் போது குற்றவாளிகள் அனைவரையும் விடுவிக்க தீர்மானித்ததாக மேல் மாகாண நிலையான மூவர் கொண்ட உயர் நீதிமன்ற நீதிவான் மன்றத்தின் 2021.07.02 திகதிய கட்டளையில் குறிப்பிடப்படுவதாக அறிவிக்கிறேன். கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்படும் ரூபா 56.31 மில்லயன் பெறுமதியில் டீ.ஏ.ராஜபக்ஷ அமைப்பினால் 2017 ஜுலை 13 திகதி செலுத்திய ரூபா 8.9 மில்லியனை பெறுமதியை குறைத்த பின்னர் அறவிட வேண்டியதாக குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 47.37 மில்லியனான பெறுமதியை அதன் பின்னரான ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. மதிப்பிற்குரிய நீதிமன்றத்தின் கட்டளையை அடிப்படையாகக் கொண்டு

தவறுகளுடன் கூடிய செலவின ஆவணங்களை தயாரித்த அலுவலர்களுக்கு எதிராக உரிய பரிசோதனையை நடாத்தி ஒழுக்காற்று மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். நீதிமன்றத் தீர்ப்பைப் பெற்ற பின்பு, திறைசேரீற்கு சமர்ப்பிக்கப்பட்டு, இழப்பைக் கழிப்பதற்கு முறையான ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிட்டிருந்த இப் பெறுமதியை புத்தகங்களிலிருந்து பதிவழிக்க பணிப்பாளர் சபை கூட்டத்திற்கு முன்வைத்து அப்பெறுமதியை புத்தகங்களிலிருந்து பதிவழிக்க அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | |

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தால் 2017 ஆண்டு முதல் தியத உயன வளவில் செயற்படுத்தும் படகு சேவைகளிலிருந்து அறவிடும் கட்டணம் அதற்காக செலவிடும் செலவுகளை மீள்நிரப்பவும் போதாத காரணத்தால் மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 0.50 மில்லியனானதுடன் மேற்கொண்ட திரண்ட நட்டம் ரூபா 3.82 மில்லியனானது. கருத்திட்டத்திற்காக மீளாய்வாண்டு இறுதியில் கூட்டுத்தாபனம் மேற்கொண்ட மொத்த கிரயம் ரூபா 6.59 மில்லியனானது. எவ்வாறாயினும் கருத்திட்டம் தொடர்ந்து நட்டமடைவதால் 2020 திசெம்பர் 31 திகதி முதல் இக் கருத்திட்ட நடவடிக்கைகளை இடைநிறுத்தப்பட்டிருந்தது. | எமது கூட்டுத்தாபனத்தின் மூலம் ஆரம்பிக்க முன்மொழியப்பட்டிருந்த பயணிகள் போக்குவரத்து கருத்திட்டத்தை ஆரம்பிக்க முன்னர், கடற்படை படகு மற்றும் ஊழியர்களை ஈடுபடுத்தி முன்னோட்ட கருத்திட்டமொன்றை தியத உயன அன்டியதாக செயற்படுத்த உத்தேசமானது. நட்டமடைந்து கொண்டிருந்த முன்னோட்ட கருத்திட்டமொன்றாக ஏனும் இதனை நடாத்திச் செல்வது பொருத்தமற்றதாகையால் இக் கருத்திட்டத்தை 2020.12.31 திகதியின் பின்னர் செயற்படவில்லை. | கருத்திட்டத்தை ஆரம்பிக்க முன்னர் சாத்தியப்பாட்டு ஆய்வொன்றை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தால் மீளாய்வாண்டிலிருந்து செயற்படுத்திய கிரிமண்டல மாவத்தை கமநல அபிவிருத்தி கருத்திட்டத்தால் மீளாய்வாண்டினுள் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 7.16 மில்லியனானது. அவ்வாறே கருத்திடத்திற்காக கூட்டுத்தாபனம் மேற்கொண்ட மொத்த கிரயம் ரூபா 7.73 மில்லியனானதுடன் அவற்றில் ரூபா 3.87 மில்லின் அதாவது 50.1 சதவீதம் ஊழிய கிரயமானது. | கிரிமண்டல மாவத்தை கருத்திட்டம் 2020 மே மாதம் 15 திகதி ஆரம்பமானதுடன் கெரவலபிடிய கழிவு முகாமைத்துவ அலகுடன் இணைந்து ஆராய்ச்சி கருத்திட்டமொன்றாக நடாத்திச் செல்லப்படும் இக் கருத்திட்டம் இலாபம் பெறச் செய்யும் நோக்கில் முதலீடு செய்த கருத்திட்டமொன்றல்ல என அறிவிக்கிறேன்.<br><br>2020 ஆண்டினுள் இக் கருத்திட்டத்திற்காக கூடுதலான கிரயமொன்றை செய்ய நேரிட்டதுடன் | சீரான நிதி முகாமைத்துவ பழக்கமொன்றை பின்பற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முறையாக அச் செலவுகளை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.<br><br>2020 ஆண்டினுள் எதிர்பாராத விதமாக அதிக மழை ஏற்பட்டதால் எதிர்பார்த்த விளைவை அடைந்துக்கொள்வது சிறிது கடினமானதுடன் கொரோனா தொற்று மூலமும் இக் கருத்திட்ட நடவடிக்கைகளுக்கு தாக்கம் ஏற்பட்டது.<br><br>நிகழ் காலத்தில் மற்றும் எதிர் காலத்தில் ஊழியர் பங்களிப்பை குறைத்துக்கொண்டு பயிர் செய்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (இ) | 2018 ஆண்டில் ஆரம்பித்து 100 நாட்களில் பூர்த்தி செய்யவிருந்த கூட்டுத்தாபனத்தின் ஈரநில முகாமைத்துவ பிரிவினால் செயற்படுத்திய முத்துராஜவல கழிவுப் பொருள் முகாமைத்துவ பூங்காவில் சேதனபசளை உற்பத்தி மத்திய நிலையமொன்றை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தின் கீழ் உத்தேச சேதனபசளை உற்பத்தி கொட்டிலிற்கான 03 ஆம் இல்கக கட்டிடத்தை நிர்மாணிக்கும் வேலைகளில் பயிலிங் செயற்பாடுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் அதற்காக ரூபா 75.80 செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியளவில் அந்நிர்மாணங்களிற்காக 03 ஆண்டுகள் கடந்திருந்த போதும் எஞ்சிய நிர்மாணங்களை 2021 திசெம்பர் அளவிலும் திட்டமிட்டவாறு தொடர்ச்சியாக மேற்கொண்டிருக்கவில்லை. | இலக்கம் 03 கட்டிடத்தின் நிர்மாண வேலைகளுக்கு உரிய பெறுகைகள் செயன்முறையை பின்பற்றி பொருத்தமான ஒப்பந்ததாரர் ஒருவரை தெரிவு செய்து தற்போது அவ் ஒப்பந்ததாரருக்கு ஒப்படைக் கடிதம் விநியோகிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், இந் நிர்மாணத்திற்காக செய்துள்ள ரூபா 75.80 மில்லியன் செலவு விளைவற்ற செலவொன்றல்லா என அறிவிக்க விரும்புகிறேன். | திட்டமிடடவாறு நிர்மாண செயற்பாடுகளை பூர்த்தி செய்ய முயற்சிக்க வேண்டும். |
| (ஈ) | ரூபா 400 மில்லியன் மதிப்பீட்டு முதலீடொன்றுடன் 2018 செப்தம்பர் 22 திகதி நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு 2019 ஆண்டு இறுதியில் வேலைகளை பூர்த்தி செய்ய எதிர்பார்த்த பிரதான அலுவலக வளவில் 07 | இந் நிர்மாணத்திற்காக ஒப்பந்ததாரர் தெரிவு செய்யப்பட்டுள்ளது உரிய பெறுகைகள் நடைமுறையை பின்பற்றியே என்பதுடன், அங்கு இவ் ஒப்பந்ததாரர் இவ் வேலைக்கு | நிர்மாணத்திற்காக சரியான ஒப்பந்ததாரரை தெரிவு செய்ய வேண்டியதுடன் ஆரம்பத்தில் திட்டமிட்டவாறு |

| | | | |
|---|---|---|---|
| | மாடிகளுடன் கூடிய புதிய கட்டிடத்தின் அதுவரை நிர்மாண (பயிலிங்) வேலைக்களுக்காக ரூபா 10.27 மில்லியன் செலவொன்று மேற்கொண்ட பின்னர், தெரிவு செய்த ஒப்பந்ததாரரின் பலவீன நிதிப் பலத்தின் மீது ஏற்பட்ட தோல்வி காரணமாக ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக பொருத்தமான ஒப்பந்ததாரர் ஒருவரை தெரிவு செய்ய 2021 ஆண்டு இறுதிவரையும் கூட்டுத்தாபனத்திற்கு இயலாதிருந்தது. அவ்வாறே ஒப்பந்த கையளிப்பிற்கு முன்னர் முன்வைக்கப்பட்ட ஒப்பந்தங்கள் சரியாக ஆய்வு செய்யாது குறித்த ஒப்பந்த கையளிப்பை மேற்கொண்ட அலுவலர்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையேனும் எடுத்திருக்கவில்லை. | பொருத்தமென தொழிநுட்ப ஆய்வுக் குழுவொன்றினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தை ஒப்படைக்கும் சந்தர்பத்தில் அவ்வாறு பலவீனமான நிதிசார் சக்தியுடன் கூடிய ஒப்பந்ததாரர் என இனங்காணப்படவில்லை. கூட்டுத்தாபனத்திற்கு விரைவில் அலுவலக வளவை நிர்மாணக்கும் தேவைப்பாடு உள்ளதால் மேலும் பயில் இடாது இதுவரை இடப்பட்டுள்ள பயில் மீது புதிய அலுவலக வளவை நிர்மாணிப்பதற்கான திட்டத்தை தயாரிக்குமாறு குறித்த அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், தற்போது கூட்டுத்தாபன நிதிசார் சக்தியையும் கவனத்திற் கொண்டு குறித்த நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்படும். | வேலைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | நிர்மாணப் பணிகளை 2018 ஜுன் 04 திகதி ஆரம்பித்து 2018 திசெம்பர் 04 திகதி பூர்த்தி செய்ய திட்டமிட்டிருந்த ஒப்பந்த பெறுமதி ரூபா 72.66 மில்லியனான கிரிமண்டல மாவத்தை விளையாட்டரங்கை நிர்மாணிக்க மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 25.84 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதும் அதன் நிர்மாணப் பணிகளை 2021 ஆண்டு இறுதியிலும் பூர்த்தி செய்ய கூட்டுத்தாபனத்திற்கு இயலாதிருந்தது. | நிர்மாணப் பணிகளை 2018 ஜுன் மாதம் ஆரம்பித்து நில அபிவிருத்தி செய்யும் வேலைகளை மற்றும் அத்திவாரம் கொன்கிரீட் இடப்பட்டு உப கட்டமைப்பு மட்டம் (Structure Level) வரை வேலைகளை 2019 ஒக்டோபர் மாதமளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. நூட்டினுள் பரவிய கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக நிர்மாண வேலைகள் சில பின்னடைவுகளுக்கு உள்ளானது. எவ்வாறாயினும் நாட்டில் நிலவும் நிகழ்கால நிலைமையின் முன் அத் தேவையான தகரங்கள் மற்றும் இரும்பு உருப்படிகளின் விலைகள் அதிகரித்த காரணத்தால் பல முறைகள் விலைமனு கோருவதற்கு நேர்ந்தது. எவ்வாறாயினும் கூரை வேலைகளை பூர்த்தி செய்த பின்னர் சிவில் நிர்மாண | நிர்மாண வேலைகளை விரைவில் பூர்த்தி செய்து எதிர்பார்த்த நலன்களை அடைந்து கொள்ளக் கூடிய வகையிலான முதலீடொன்றாக நடாத்திச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வேலைகளை மேற்கொள்ளுமாறு என்னால் குறித்த அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | கூட்டுத்தாபன பிரதான அலுவலக வளவில் நிர்மாணிக்கவுள்ள ஏழு மாடிகளுடனான கட்டிடத்திற்கு தேவையான காணியளவை வழங்குவதற்காக தற்போதுள்ள நீர் தாங்கியை அகற்றும் நோக்கில் நிர்மாணிக்க ஆரம்பிக்கப்பட்ட எதிர்பார்த்த தண்ணீர் கோபுரம் (Water Tower) ஒன்றிற்காக 2019 ஆண்டளவில் ரூபா 2.59 மில்லியன் செலவிட்டிருந்த போதும் 2021 ஆண்டு இறுதியிலும் அதன் நடவடிக்கைகளை பூர்த்தி செய்யாது இடைநடுவே நிறுத்தியிருந்த காரணத்தால் மேற்கொண்டு செலவு விளைவற்ற செலவாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் அந்நிர்மாணத்திற்குரிய தகவல்களுடனான கோவை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இந்த நீர் கோபுரம் நிர்மாணம் கருத்திட்ட வேலையல்லாததுடன், பிரதான அலுவலக பின்புறமாக நிர்மாணிக்க உத்தேசித்த கட்டிட நிர்மாணத்திற்காக அவ்வளவில் உள்ள நீர் தாங்கியை அகற்ற முன்மொழியப்பட்டிருந்ததால் உத்தேச கட்டிட நிர்மாணம் பூர்த்தி செய்யப்படும் வரை நீர் தாங்கியை வைப்பதற்கு தற்காலிகமாக நிர்மாணிக்கும் வேலையொன்றாகும். இந்த நிர்மாணத்திற்காக எஞ்சிய உருக்குகளுடன் கூடிய கட்டமைப்பொன்றை தயாரிக்குமாறு கூட்டுத்தாபன இயந்திரவியல் பிரிவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன், அடித்தளத்தை நிர்மாணித்தல், நிர்மாண பிரிவின் பராமரிப்பு அலகினால் மேற்கொள்ளப்படும். தற்போது அடிக்கப்பட்டுள்ள ஷீட் பயில் மீது மாத்திரம் அலுவலக கட்டிடத்தை நிர்மாணிக்க திட்டம் தயாரிக்கப்படுவதால் அதன் பிரகாரம், இத் தாங்கியின் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்படும். அதனால் தற்போது மேற்கொண்டுள்ள செலவுகள் வியைவற்ற செலவொன்று அல்லதாகும். | மேற்கொண்ட நிர்மாணங்களிலிருந்து எதிர்பார்த்த நலன்களை அடைந்து கொள்ளக் கூடியவாறு நடாத்திச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | மீள் நிலைப்படுதும் கருத்திட்டம் - முத்துராஜவெல (Relocation project – Muthurajawela) இற்காக கட்டிடமொன்றை நிர்மாணிக்க 2017 ஆண்டில் ஆரம்பித்து 2018 ஆண்டில் பூர்த்தி செய்ய உத்தேசித்திருந்த போதும் 2020 அளவிலும் அதன் பணிகளை பூர்த்தி செய்திருக்காததுடன் 2020 | துரித கருத்திட்டமொன்றாக 2017 ஆண்டில் கரிமண்டல மாவத்தையில் அமைந்துள்ள உத்தேச கூட்டுத்தாபன இயந்திரவியல் வேலைத்தளம், முத்துராஜவெல வளவில் மீள் நிலைப்படுத்துவதற்காக நிர்மாண பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2020 செப்டம்பர் மாதளவில் | திட்டமிட்ட வாறு நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்ய முயற்சிக்க வேண்டும. |

| | | | |
|---|---|---|---|
| | செப்டம்பர் முதல் அதன் நிர்மாண பணிகள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தது. கருத்திட்ட பணிகளிற்காக அதன் போது கூட்டுத்தாபனத்தால் ரூபா 161.53 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் கட்டிடத்தினுள் மின் குமிழ்கள் பொறுத்துவது மாத்திரம் எஞ்சியிருந்தன. மேலும் உத்தேச இயந்திரவியல் பிரிவின் கிரென்டிரீ கட்டிடத்தின் (Substructure) பகுதியின் வேலைகள் பூர்த்தியாகியுள்ளது. | |
| (ஏ) | ஹொரன பேரூந்து தரிப்பிடம் - இரண்டாம் கட்ட நிர்மாண கருத்திட்டத்திற்குரியதாக கூட்டுத்தாபனத்திற்கு 2015 பெப்ரவரி 17 திகதியன்று அறவிட வேண்டிய ரூபா 5.53 மில்லியன் பெறுமதியை மீளாய்வாண்டு இறுதியிலும் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து அறவிட கூட்டுத்தாபனத்திற்கு இயலாதிருந்ததுடன் கருத்திட்டத்தை இடைநடுவே நிறுத்தியிருந்ததால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 12.35 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. | இதன் சேவை வழங்குனர் பணம் செலுத்தாதன் மீது இவ் வேலைகளை இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன், இதற்காக கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டிய தொகை வேலை வழங்குனருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்காக தற்போது கலந்துரையாடப்படுகின்றது. இதனை மீண்டும் சேவை வழங்குனருடன் புதிய கருத்திட்டமொன்றாக ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திட்டு 2017 ஆண்டு செப்டம்பர் மாதம் III ஆம் கட்டம், 2018 ஆண்டு ஏப்ரல் மாதம் IV ஆம் கட்டம் மற்றும் 2018 ஆண்டு திசெம்பர் மாதம் V ஆம் கட்டமாக வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டிய தொகையை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | கலாசார மத்திய நிலையமொன்றை நிர்மாணிக்க உத்தேச முதுராஜவல காணியை அபிவிருத்தி செய்வதற்குரிய இழப்பீடு வழங்குவதற்காக 2001 ஆண்டு மேற்கொண்டுள்ள ரூபா 2.44 மில்லியனும் உள்ளடங்களாக 20 ஆண்டுகளாக நம்பிக்கை பொறுப்பு திணைக்களத்திலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு அறவிட வேண்டிய, ரூபா 25.64 மில்லியனை அறவிட கூட்டுத்தாபனத்திற்கு இயலாதிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டிய தொகையை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

3.3 முகாமைத்துவ செயற்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | (i) கடல் மணல் 1,500,000 கன மீட்டர்களை குவிப்பதற்காக வெளிநாட்டு நிறுவனமொன்றுடன் 2018 ஆண்டில் ஒப்பந்தமொன்றிற்கு உடன்பட்டிருந்ததுடன் அச்செயற்பாட்டை செய்துகொண்டிருக்கும் போது 2020 பெப்ரவரி 20 திகதி உரிய அங்கீகாரமின்றி கடற்கரை பாதுகாப்பு கருத்திட்டமொன்றிற்காக இவ்வியந்திரத்தை விடுவிக்கப்பட்டிருந்தது. அதன் போது 465,154 கன மீட்டர்கள் மணல் மாத்திரமே குவிக்கப்பட்டிருந்த போதும் ஒப்பந்த காலம் முடியும் முன்னர் கூட்டுத்தாபனத்தால் 2020 ஏப்ரல் 10 திகதியிலிருந்து ஒப்பந்தத்தை முடிவுறுத்திய காரணத்தால் குறித்த நிறுவனம் கூட்டுததாபனத்திற்கு எதிராக ரூபா 2.96 பில்லியன் நட்டமொன்றை கோரியிருந்தது. | சட்டமா அதிபரின் அபிப்பிராயத்தை விசாரித்தறிந்த பின்னர் உடன்படிக்கையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. | உடன்படிக்கை காலம் முடிவடைய முன்னர் உடன்படிக்கையை முடிவு செய்யததற்கு பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |
| | (ii) கடல் மணல் இருப்புக்களின் மீள்கட்டளை மட்டத்தை தீர்மானித்து இருப்புக் கட்டுப்பாடொன்றை மேற்கொள்ளாததால் மணல் இருப்பு பற்றாக்குறையான சந்தர்ப்பங்களில் தேவையான கடல் மணலை பெற்றுக் கொள்ள முத்துராஜவல பிரதேசத்தில் இலங்கை மின்சார சபைக்கு கூட்டுத்தாபனம் விற்பனை செய்த காணியொன்றிலிருந்து 2011 ஆண்டில் கடல் மணலை வெட்டி அகற்றுவதற்காக ரூபா 351.13 மில்லியனும், 2018 ஆண்டில் | 2011 ஆண்டில் கொழும்பு – கடுநாயக கடுகதி வீதியை நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்கு ஏற்பட்ட அவசர தேவை மீது இலங்கை மின்சார சபைக்கு விற்பனை செய்த காணியிலிருந்து மணல் வழங்கப்பட்ட போதும், 2012 – 2014 கால எல்லையினுள் சில மட்டமொன்று வரை மீண்டும் மணல் நிரப்ப வேண்டி ஏற்பட்டது. தற்போது அந்த காணியை பூரணமாக நிரப்பி முடிக்கப்பட்டுள்ளது.<br><br>2019 முதலாம் | காணி மீள்நிரப்பு செய்யப்பட்டடுள்தெனின் கணக்குகளில் காணப்படும் செலவு மீதிகளை தீர்க்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முத்துராஜவலயில் அமைந்துள்ளஇன்னும் ஒரு காணியிலிருந்து மணல் வெட்டுவதற்காக ரூபா 183.68 மில்லியனும், கடந்த ஆண்டில் மீண்டும் முத்துராஜவலயில் அமைந்துள்ள இன்னும் ஒரு காணியிலிருந்து மணல் வெட்டி அகற்றுவதற்கு ரூபா 23.19 மில்லியனுமாக மீளாய்வாண்டு இறுதியில் அக்காணிகளை மீண்டும் நிரப்ப தேவையான மணலிற்காக நிதிக்கூற்றுக்களில் செய்திருந்த மொத்த ஒதுக்கீட்டு பெறுமதி ரூபா 557.99 மில்லியனான போதும் இவ் ஒதுக்கீட்டை கணக்குகளிலிருந்து அகற்ற மீளாய்வாண்டு இறுதியிலும் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காலாண்டினுள் ஏற்பட்ட மணல் பற்றாக்குறைக்கு தீர்வாக அவதானிப்பின் போது குறிப்பிட்டுள்ள இரண்டாம் காணியிலிருந்து மணல் அகழ்வு மேற்கொண்ட போதும், 2019 ஆண்டினுள்ளேயே அதனை மீள்நிரப்பு செய்யப்பட்டுள்ளது.<br><br>மூன்றாம் காணியிலிருந்து மணல் அகழ்வு மேற்கொண்டதுன், கடுகதி வீதி கருத்திட்டத்தின் போது அகற்றப்பட்ட மண்ணை பயன்படுத்தி அது மீள்நிரப்பு செய்யப்பட்டது. | |
| (ஆ) | கூட்டுத்தாபனத்திற்கு சுவந்திர பேணலின் அடிப்படையின் மீது (Free Hold Basis) அரசாங்கத்தினால் வழங்கியிருந்த முதுராஜவெலயில் அமைந்துள்ள 02 ஏக்கர் அளவான காணியொன்றிற்காக அமப/19/2832/16/11 இலக்கம் மற்றும் 2019 ஒக்டோபர் 29 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அதற்காக செலவிட்ட அபிவிருத்தி செலவுகளை அறவிட்டு எஞ்சிய தொகையை அரச திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்குமாறு முன்னைய ஆண்டில் அறிவித்திருந்த போதும் அவ்வாறு அக்காணியை 2019 திசெம்பர் 17 திகதி விற்பனை செய்து ரூபா 272.62 மில்லியன் பெற்றிருந்த போதும் மேற்கொண்ட அபிலிருத்தி செலவுகள் ரூபா 21.02 மில்லியனை குறைத்து திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டிய ரூபா 251.60 மில்லியனை 2022 மார்ச் வரையும் செலவு வைத்திருக்கவில்லை. | முதுராஜவெலயில் அமைந்துள்ள 02 ஏக்கர் - 03 ரூட் - 34.51 பர்சஸ் ஆன காணிக் பங்கொன்றை இலங்கை பெற்றோலிய முனைய கம்பனிக்கு ஒப்படைத்தல் செயலாளர்களின் குழுவின் மூலமும் பரிந்துரைத்துள்ளதுடன் குறித்த மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு காணி ஒப்படைத்தலை அமைச்சரவையினாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | காணியை வெளியிடுவது தொடர்பான அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கொழும்பு தலைநகர அபவிருத்தி கருத்திட்டத்தில் (MCUDP) கடமையில் ஈடுபடுத்தியிருந்த கூட்டுத்தாபன ஊழியர்களிற்காக 2019 ஆண்டில் மற்றும் மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தால் செலுத்திய சம்பளத்திலிருந்து மீளாய்வாண்டு இறுதிவரை மீள்நிரப்பியிருக்காத மீதி ரூபா 6.9 மில்லியனானதுடன் அதில் ரூபா 4.08 மில்லியன் தொகையொன்று ஓராண்டையும் விஞ்சிய காலமாக மீள்நிரப்பப்படாத மீதியொன்றானது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | மீள்நிரப்பிக் கொள்ள வேண்டிய தொகையை விரைவில் மீள்நிரப்பிக் கொள்ள வேண்டும். |
| (ஈ) | உடன்படிக்கை கைச்சாத்திடாது 2012 ஆண்டில் வருடாந்த குத்தகை அடிப்படையின் மீது வழங்கியிருந்த கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான ஒருகொடவத்தை, பிரதேசத்தில் அமைந்துள்ள 05 காணி துண்டுகளின் வருடாந்த குத்தகை வாடகையான ரூபா 2.89 மில்லியனை 2017 ஆண்டு முதல் செலுத்துவதை குத்தகைதாரர்களினால் புறக்கணித்திருந்த போதும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒருகொடவத்தையில் அமைந்துள்ள குறித்த 05 காணித் துண்டுகளையும் வருடாந்த குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ளதுடன் பணம் செலுத்தாத காரணத்தால் குத்தகை உடன்படிக்கையை நாளாதுவரையாக்க இயலாதுள்ளது. அவற்றில் ஒரு காணித் துண்டிற்குரிய மொத்த நிலுவைப் பணத்தையும் தற்போது தீர்த்து உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன் எஞ்சிய காணித் துண்டுகள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க அனுப்பப்பட்டுள்ளது. | குத்தகை வாடகையை புறக்கணித்துள்ள நபர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தினால் சந்தையில் காணப்பட்ட ரூபா 77.29 மில்லியன் பெறுமதியான 02 நிர்மாண ஒப்பந்தங்களிற்காக மாத்திரம் போட்டி விலை மனு சமர்பித்திருந்ததுடன் ரூபா 22.73 மில்லியனான ஒரு ஒப்பந்தத்தை மாத்தரமே பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. கூட்டுத்தாபனம் திறந்த சந்தையில் காணப்படும் போட்டி ஒப்பந்தங்களை பெற்றுக் கொள்ள போதிய கவனம் செலுத்தாது திறைசேரி ஏற்பாட்டின் மீது கிடைக்கும் ஒப்பந்த நடவடிக்கைகளை மாத்திரம் மேற்கொள்வதால் | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | கூட்டுத்தாபனம் போட்டியாக சந்தை பங்கை அதிகரித்துக் கொள்ள போதிய முயற்சிகள் எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்த சந்தை பங்கை இழக்கப்பட்டிருந்தது. | | |
| (ஊ) | ஒப்பந்தம் கைச்சாத்திடாது, நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான கிபுலாவெலயில் அமைந்துள்ள காணியொன்றில் கூட்டுத்தாபனத்தால் நிர்மாணித்த சிற்றுண்டிசாலையை குத்தகை அடிப்படையில் தனியார் கம்பனி ஒன்றிற்கு 2017 ஆண்டில் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அச் சிற்றுண்டிச்சாலை அமைந்துள்ள காணிப் பிரதேசம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணியொன்றாகையால், கூட்டுத்தாபனத்திற்கு சிற்றுண்டிச்சாலை உரித்தான போதும் காணியின் உரிமை இல்லாததால் ரூபா 24.58 மில்லியனான குத்தகை தொகையை அறவிட மீளாய்வாண்டு இறுதிவரை கூட்டுத்தாபனத்திற்கு இயலாதிருந்தது. | செலவிட்டுள்ள தொகையை பெற்றுக் கொள்ள எம்மால் பல சந்தர்ப்பங்களில் ம/ப ரக்னா இலங்கை பாதுகாப்பு கம்பனியிடம் கோரிய போதும் அக் காணியை அவர்களுக்கு ஒப்படைத்த பின்னர் குறித்த தொகையை வழங்க முடியுமென எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும் அக்காணி பிரதேசம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமாகையால் அக்காணியை இந்த கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்குமாறு கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது. அது தொடர்பாக கவனத்திற் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் வாய்மூல இணக்கப்பாடு கிடைத்துள்ளது. அதன் பிரகாரம் முன்நடவடிக்கை எடுக்க இக் கூட்டுத்தாபனத்தின் காணிப் பிரிவு மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டுத்தாபனத்தால் காணியை சுவீகரிக்காது நிர்மாணம் மேற்கொள்ளக் கூடாது. இக் காணியை சுவீகரிக்க விரைவில் முயற்சிக்க வேண்டும். |
| (எ) | ஆவண காப்பு மற்றும் மீள்பெற்றுக் கொள்ளல், ஆவணங்களை இஸ்கேன் செய்தல் மற்றும் ஆவண டிஜிடல்மயமாக்கல் ஒப்பந்தத்தை 2017 நவம்பர் 30 திகதி வழங்கி 2018 நவம்பர் 30 திகதி பூர்த்தி செய்ய வேண்டிய போதும் அவ்வொப்பந்தத்திற்கு அமைய மேற்கொள்ள வேண்டிய சுட்டியலப்படுத்தும் நோக்கில் இஸ்தாபிக்கப்பட்ட EDMS மென்பொருளை 2022 ஜூன் 05 திகதி வரையும் பூர்த்தி செய்திருக்காததுடன் அதற்காக மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 6.23 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. புதிய | இந்த EDMS மென்பொருளை கூட்டுத்தாபனத்தின் தொடர்புடைய சில பிரிவுகள் பயன்படுத்துகின்றன. எனினும் மேலும் இந்த மென்பொருளின் பயன்பாட்டை செயற்திறனாக்க மென்பொருளிற்கு உள்ளீடு செய்துள்ள ஆவணங்களை வகைப்படுத்த வேண்டியுள்ளது. அச் செயற்பாடுகளை 2022.03.31 திகதியளவில் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அவ்விடயங்களை பூர்த்தி செய்த பின்னர் இந்த | அறிமுகம் செய்யப்பட்ட தொகுதியை செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். |

| | |
|---|---|
| தகவல் தொழிநுட்ப தொகுதியை இஸ்தாபித்து பயன்பாட்டாளர்கள் 13 பேர்களை அதற்காக பயிற்றுவித்து அவர்களிற்காக User ID மற்றும் Password வழங்கி தொகுதியை பயன்படுத்த முடியுமான நிலைக்கு கொண்டுவந்திருந்த போதும் மீளாய்வாண்டு இறுதிவரையும் அதனை உரிய செயற்திறனாக பயன்பாட்டிற்கு எடுத்திருக்கவில்லை. | மென்பொருளை அதிக செயற்திறனாக பயன்படுத்த முடியுமென அறிவிக்கிறேன். இச் செயற்பாடுகளை பூர்த்தி செய்யும் வரை இதனை நடைமுறை வேலைகளின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளதுடன், குறித்த செயற்பாடுகள் பூர்த்தியான பின்னர் இத்தொகுதியை கற்புலனாகும் சொத்தொன்றாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கங்கள் செய்யப்படும். |

**3.4 செயலாற்றுகை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 800 மில்லியனான திறைசேரி ஏற்பாடு ஒதுக்கியிருந்த வண்டல்மண் அகற்றுவதனூடாக பேரே வாவியை சுத்திகரிப்பதற்கான கருத்திட்டத்தின் வேலைகள் 2019 ஆண்டில் பூர்த்தி செய்ய வேண்டிய போதும் மீளாய்வாண்டு இறுதி வரையும் பெற்றிருந்த முன்னேற்றம் 21 சதவீமான இழிவுப் பெறுமானமானது.<br>இக்கருத்திட்டத்தை செயற்படுத்த இயந்திர உபகரண பெறுகைகளுக்காக ரூபா 283.50 மில்லியன் திறைசேரி ஏற்பாட்டை விஞ்சி 2019 ஆகஸ்ட் மாதத்தில் ரூபா 398.25 மில்லியன் பெறுமதியான 4 இயந்திரங்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தன. | இக் கருத்திட்டத்தின் வேலைகளை 2019 ஆண்டினுள் பூர்த்தி செய்யவும் அதற்கு தேவையான இயந்திர உபகரணங்களை பெறுகை செய்து கருத்திட்ட வேலைகளை விரைவில் ஆரம்பிக்கவும் அனுப்பப்பட்டிருந்தது. அமைச்சரவை அங்கீகார பெறுமதியை விஞ்சி பெறுகைகள் நடவடிக்கை மேற்கொண்டிருந்த இயந்திரங்கள் தொடர்பாக அதன் போது வரிசை அமைச்சின் செயலாளரினால் மேலதிக விசாரணைக்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது. | அமைச்சரவை கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கும் பொது மக்கள் நலன்புரி நடவடிக்கைகளை வினைத்திறனாக மற்றும் பயனுறுதிமிக்கதாக மேற்கொள்ள வேண்டும். |
| | அவ் இயந்திரங்களிற்காக தவணைகளாக ரூபா 169.61 மில்லியனை 2021 ஆண்டு இறுதியில் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தியிருந்த போதும் 2021 ஆண்டு இறுதியில் ஓட்ட நிலைமையை பரிசோதித்து (Test Run) இயந்திரங்களின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களிற்கு எடுத்திருக்காததுடன் அவ் | அமைச்சரவை அங்கீகார பெறுமதியை விஞ்சி இவ் இயந்திரத்தை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதால் இவ் இயந்திரத்திற்காக கொடுப்பனவு செய்ய அதிகாரமொன்று நிகழ் கால கட்டுப்பாட்டு சபைக்கு இல்லாதுள்ளமை | |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரங்கள் பயன்படுத்தாது 2 வருடங்களாக பேரே வாவி வளவில் விளைவற்று காணப்படுவது அவதானிக்கப்பட்டன. | பிரச்சினைக்கு காரணமாகவுள்ளது. இவ் இயந்திரங்களை உரிய பதிவேடுகளிற்கு உட்படுத்தி உத்தியோகபூர்வமாக கையேற்க தற்போது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அறிவிக்கிறேன். அதனால் இப் பெறுமதியை நிதிக்கூற்றுக்களிற்கு உட்படுத்த இயலுமை இல்லை. | |
| (ஆ) | திறைசேரி ஏற்பாட்டின் கீழ் 2016 ஆண்டில் ஆரம்பித்து 2021 ஆண்டு இறுதியளவில் பூர்த்தி செய்யும் எதிர்பார்ப்பில் கூட்டுத்தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட முதுன்எல அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் வீடுகளை இழப்பவர்களுக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்ட 164 வீடுகளை பெற்றுக் கொள்ள ரூபா 600 மில்லியன் 2017 திசெம்பர் 31 திகதியளவில் செலவிட்டிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதியிலும் 98 வீடுகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 66 குடுப்பங்களிற்காக 2022 ஆண்டளவிலும் புதிய வீடுகளை வழங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறே 2020 ஆண்டு இறுதியில் பூர்த்தி செய்ய உத்தேசிக்கப்பட்ட ஒலியமுள்ள நீர் உந்திக் கருத்திட்டத்திற்காக 02 நீர் உந்தி நிலையங்களை நிர்மாணிக்க உத்தேசித்திருந்ததுடன் அந் நிர்மாண பணிகளை உரிய தினத்தில் பூர்த்தி செய்யாத காரணத்தால் 2018 ஆகஸ்ட் 20 திகதி ரூபா 83.40 மில்லியனிற்கு கொள்வனவு செய்திருந்த $5M^3/S$ இரண்டு நீர் உந்திகள் 2022 மார்ச் வரை விளைவற்று காணப்பட்டன. | ஒலியமுள்ள நீர் உந்திக் கருத்திட்டத்தை 2018 ஆண்டு முதல் ஒவ்வொறு ஆண்டுகளிற்கும் பொது திறைசேரியினால் ஒதுக்கப்படும் ஏற்பாட்டின் பிரகாரம் கருத்திட்ட செயல் நடவடிக்கை திட்டத்தை திட்டமிட நேரிட்டது. அது 2020 ஆண்டில் கருத்திட்டத்தை பூர்த்தி செய்யும் வகையில் திட்டமிடப்பட்ட ஆரம்ப திட்டத்தித்தை விட மிகத் தாமத திட்டமொன்றானமை கூட்டுத்தானத்திற்கு தவிர்க்க முடியாத காரணமொன்றானது. ஆரம்ப திட்டத்தின் பிரகாரம் 2018 ஆண்டில் 02 உந்திகள் கூட்டுத்தாபனத்தால் கொள்வனவு செய்யப்பட்டன. அவ் உந்தி வழங்குனரினால் உத்தேசிக்கப்படும் வடிவம் பிரகாரம் உந்தி நிலைய சிவில் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்ய வேண்டியதால் உந்தி நிலைய நிர்மாண வேலைகளை ஆரம்பிக்க முன்னர் உந்திகளை கொள்வனவு செய்யும் ஒப்பந்தத்தை உரிய வழங்குனரிற்கு ஒப்படைக்க வேண்டியிருந்தது. ஆரம்ப செயல் நடவடிகதை திட்டம் பிரகாரம் ஆரம்ப சந்தர்ப்பத்தில் நடவடிக்கை இடம்பெற்ற போதும் பிற்காலத்தில் கருத்திட்டத்திற்கு | வீடு இழந்தவர்களுக்கு துரிதமாக வீடுகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் இரண்டு உந்தி நிலையங்களின் நிர்மாணத்தை துரிதமாக பூர்த்தி செய்து எதிர்பார்த்த விளைவுகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கோரியவாறு வருடாந்தம் ஒதுக்கிய ஏற்பாட்டை வழங்காததால் இதுவரை நீர் உந்தி நிலைய நிர்மாண வேலைகள் திட்டமிட்டவாறு பூர்த்தி செய்ய முடியாதுள்ளது. நீர் உந்தி நிலையத்தை பூர்த்தி செய்த பின்னர் மாத்திரமே உந்தியை இஸ்தாபித்து செயற்படுத்த முடியுமாகும். | |
| (இ) | மதிப்பீட்டு கிரயம் ரூபா 8,700 மில்லியனான உலக வங்கி உதவியின் கீழ் கருத்திட்டத்தை திட்டமிட்டிருந்த கொலன்னாவ மழைநீர் சுத்திகரிப்பு மற்றும் சுற்றாடலை மேம்படுத்தும் கருத்திட்டத்தை பின்னர் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் திறைசேரி ஏற்பாட்டின் மீது செயற்படுத்த திட்டமிட்டிருந்துடன், கருத்திட்டத்தை 2018 ஆண்டிலிருந்து 05 ஆண்டுகளில் பூர்த்தி செய்ய வேண்டிய போதும் 2021 ஆண்டு இறுதிவரையும் 13.27 கி.மீ நீளத்திலான பஸ்ஸென்ன வாய்காலின் 250 மீட்டரான தூரம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.<br>திட்டமிட்டவாறு திறைசேரி ஏற்பாடு கிடைக்காத இக்கருத்திட்டத்தின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் மிகக் குறைந்த 4 சதவீதமானது. | ரூபா 8,700 மில்லியன் மதிப்பீட்டு கிரயமான இக் கருத்திட்டத்திற்காக இலக்கம் அமப/19/0367/116/020 மற்றும் 2019.02.18 திகதிய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் 2018 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை நிதி ஏற்பாடு திறைசேரியினால் ஒதுக்கப்படாததுடன் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த பாதீட்டு ஏற்பாடடினூடாக இக் கருத்திட்டதிற்காக ரூபா 135 மில்லியனான ஏற்பாடு வழங்கப்பட்டது. போதிய ஏற்பாடு இல்லாதமை மற்றும் 2020 ஆண்டு முதல் எழுந்துள்ள கொவிட் 19 உலகளாவிய தொற்று நிலைமை காரணமாக திட்டமிட்டவாறு பூர்த்தி செய்ய முடியாதுள்ளது. மேலும் 2021 ஆண்டு இறுதியில் கி.மீ 4.1 உடன் கூடிய பஸ்சென்ன கால்வாயுடன் தொடர்புபடும் 450 மீட்டரான துணை கால்வாயின் மேம்படுத்தல் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களிற்கு உரிய ஏற்பாட்டை திட்டமிட்டவாறு பெற்றுக் கொண்டு சரியான முகாமைத்துவத்துடன் செயற்படுத்த வேண்டும். |
| (ஈ) | கூட்டுத்தாபனம் 2010 ஜுலை 14 திகதி வெளியிட்ட 1662/17 இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மேல் மாகாணத்தில் அமைந்துள்ள கால்வாய்களின் ஒதுக்கு காணிகளை (Reservation) பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் மீளாய்வாண்டு இறுதி வரையும் குறித்த | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | கூட்டுத்தாபன அதிகாரம் மற்றும் நோக்கத்தின் பிரகாரம் அனுமதியற்ற நிரப்பளை தடுக்க முயற்சி எடுக்க வேண்டும். |

வர்தமாணி பிரசுறிக்கப்பட்டு 10 ஆண்டுகள் கடந்ததிருந்த போதும் அவ் ஒதுக்கு காணிகளை இனங்காண அல்லது ஒதுக்கு காணிகளில் குடியேரியுள்ள அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்ற ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்திருக்வில்லை.

## 3.5 செயற்பாட்டுப் நடவடிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1968 இன் 15 இலக்க இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபன அதிகாரசட்டத்தின் 2(ஆ)1 பிரிவின் பிரகாரம் நாடு முழுவதும் மாகாண மட்டத்தில் அமைந்துள்ள தாழ்நிலக் சதுப்பு நிலங்கள், வளமற்ற அல்லது சேற்றுக் காணிகளை இனங்கண்டு அனுமதியற்ற காணி நிரப்புதல்களை கட்டுப்படுத்த மற்றும் மேற்பார்வை செய்யக் கூடியவாறு அவற்றை வர்தமானி அறிவித்தல் மூலம் பகிரங்கப்படுத்த கூட்டுத்தாபனத்திற்கு அதிகாரமளித்திருந்த போதும் மீளாய்வாண்டு இறுதியில் கூட்டத்தாபனத்தினால் அவ்வாறு வர்தமானிப்படுத்திய மாகாணங்களின் எண்ணிக்கை 06 இற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எல்லைகள் வர்தமானிப்படுத்தியிருந்த அக்காணி பிரதேசங்களில் இடம்பெறும் அனுமதியற்ற காணி நிரப்புதல்கள் மற்றும் அனுமதியற்ற குடியேற்றங்களை தடுக்க கூட்டுத்தாபனத்திற்கு இயலாதிருந்தது. அவ்வாறே மேற்குறிப்பிட்ட அதிகார சட்டத்தின் 8 (அ) பிரிவு பிரகாரம் நிரப்ப மற்றும் அபிவிருத்தி செய்யவதற்காக சுவீகரிக்கும் காணிகளை, கூட்டுத்தாபனத்தால் கட்டிடங்களை நிர்மாணிக்க, கைத்தொழில் வர்த்தக மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்காக மேம்படுத்த வேண்டிய போதும், கூட்டுத்தாபனத்தால் அவ்வாறு 1995 ஆண்டில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக சுவீகரித்த | தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் தவிர ஏனைய 07 மாகாணங்களில் அமைந்துள்ள சதுப்பு, வளமற்ற, சேற்று காணிகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாண ஈர நிலங்களை பிரசுரிக்க தொடர்புடைய பிரதேச செயலாளர்களின் ஒப்புதலை கோரியுள்ள போதும் அந்த ஒப்புதலை வழங்கும் தாமதம் காரணமாக கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள தாழ்நிலக் சதுப்பு நிலங்கள், வளமற்ற அல்லது சேற்றுக் காணிகளை பிரசுரித்தல் தாமதித்துள்ளதுடன் இது தொடர்பாக மாகாண ஆளுனர்களின் மற்றும் அரசாங்க அதிபர்களின் சம்மேளத்தில் தேவைான நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.<br>2006 இன் 35 இலக்க திருத்திய சட்டத்தின் 2(ஆ)1 பிரிவின் பிரகாரம் நாடு முழுவதும் அமைந்துள்ள அனைத்து ஈரநிலங்களை பிரசுரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.<br>அதன் பிரகாரம் மேல், தென், ஊவா, மத்திய, சபரகமுவ மற்றும் வடமத்திய ஆகிய மாகாணங்களில் ஈரநிலங்கள் வர்த்தமாணி மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ளன.<br>வடமேல் மாகாணத்திற்கு உரியதாக அனைத்து பிரதேச செயலாளர்களின் பரிந்துரை கிடைத்து<br>முடிவடைந்துள்ளதுடன் காணி | விடயவாரியான காணிகளை இனங்கண்டு வர்தமானி மூலம் பகிரங்கப்படுத்த வேண்டியதுடன் அபிவிருத்தி செய்ய வேண்டிய காணிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை விரைவில் செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முத்துராஜவல மற்றும் முதுன்எல பிரதேசங்களில் 800 ஏக்கர் அளவான காணிகளில் மீளாய்வாண்டு இறுதியில் 24 ஆண்டுகள் கடந்திருந்த போதும் அவற்றில் மேம்படுத்திய அளவு 400 ஏக்கர்களாகும் அதாவது, 50 சதவீதமான குறைந்த பெறுமானமானது. | ஆணையாளர் நாயகத்தின் பரிந்துரை காணி அமைச்சிற்கு அனுப்ப வேண்டியதாகவுள்ளது. வடக்கு மாகாணத்திற்கு உரிய வரைபடம் மற்றும் அட்டவணை கிடைத்துள்ளதுடன் அட்டவணை பரிமாற்றம் செய்யும் நடவடிக்கைகளிற்காக அனுப்பப்பட்டுள்ளது. குறித்த பரிந்துரைகளை பெற்றுக் கொள்ளும் போது பிரதேச செயலாளர்களின் பரிந்துரைகள் மாகாண காணி ஆணையாளரூடாக காணி ஆணையாளருக்கும் அவர்கள் மூலம் மீண்டும் காணி அமைச்சிற்கு அனுப்பப்படுவதால் இதற்காக கனிசமான காலமொன்று செல்லுகின்றது. எம்மால் தொடர்ந்தும் இது தொடர்பாக விசாரித்த போதும் அந்த நிறுவனங்களில் நிலவும் தாமதம் இதற்கு தாக்கம் செலுத்தியுள்ளது. | |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தால் 1996 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை 05 பிரதேச செயலக பிரிவுகளிற்குரியதாக 09 நீரேந்து பிரதேசங்களில் 400 ஹெக்டயர்களில் மேற்கொண்டுள்ள அனுமதியற்ற நிர்மாணங்கள் மற்றும் நிரப்புதல்கள் 1,104 இனை இனங்கண்டுள்ள போதும் அவ்வாறு இனங்கண்ட அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்ற மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரை கூட்டுத்தாபனத்திற்கு இயலாதிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்ற கூட்டுத்தாபனத்திற்கு உள்ள அதிகாரம் பிரகாரம் நடவக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 1981 ஆண்டு முதல் 2005 ஆண்டு வரையான காலப் பகுதிக்குள் கூட்டுத்தாபனத்தால் சுவீகரித்த காணிகளிற்குரிய நட்டஈட்டு பணத்தை செலுத்தும் நடவடிக்கை தாமதித்த காரணத்தால் அக் காணிகளிற்காக மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதிக்கு செலுத்த வேண்டியதான நட்டஈடு ரூபா 47.11 மில்லியனானதுடன் அதற்குரியதாக செலுத்த வேண்டிய வட்டி ரூபா 109.29 | நட்டஈடு செலுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது உரிய பிரசேத செயலகங்களினால் ஆகும். சுவீகரிக்கும் நடவடிக்கை தொடர்பாக விடய அறிவுள்ள அலுவலர்களின் பற்றாக்குறை, அலுவலர்கள் அடிக்கடி இடமாறுதல், மதிப்பீட்டறிக்கை தாமதித்தல், அளவை திணைக்களத்தின் திட்டத்தை தயாரிக்கும் போது ஏற்படும் தாமதம், | காணிகளிற்கான நட்டஈட்டை தொகையை உரிய காலத்தில் தீர்த்து நட்டஈட்டு வட்டியை குறைத்துக் கொள்ள வேண்டியதுடன் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியனானது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் செலுத்த வேண்டியிருந்த வட்டி முன்னைய ஆண்டைவிட ரூபா 1.84 மில்லியனால் அதிகரித்திருந்தது. அவ்வாறே காணிகளை சுவீகரிக்க 14 ஆண்டுகள் முதல் 39 ஆண்டுகள் வரை வீச்சளவான காலம் கடந்துள்ளதால் இக்காணிகளின் அனுமதியற்ற குடியிறுப்பாளர்களின் குடியிறுப்புக்கள் அதிகரித்துள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டது. | அக்காணிகளில் உரிமை உறுதியாகாத சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்திற்கு அனுப்புதல் மற்றும் பல நீதிமன்ற நடவடிக்கைகள் எடுத்தல், நட்டஈடு போதாமை காரணத்தால் நட்டஈட்டு மீளாய்வு சபைக்கு சமர்பித்தல் மற்றும் அத் தீர்மானங்களை எடுக்கும் போது ஏற்படும் தாமதம் போன்ற அநேக விடயங்கள் சுவீகரிக்கும் நடவடிக்கைகளிற்காக தாக்கம் செலுத்தியிருந்தன. இவ்வாறு ஏற்படும் தாமதங்களை முடியுமான அளவிற்கு குறைத்துக் கொள்ள மற்றும் குறித்த ஆலோசனைகள் பிரதேச செயலாளர்களுக்கு வழங்க மாவடட் செயலாளரின் தலைமையில் அனைத்து நிறுவனங்களையும் இணைத்துக் கொண்டு முகாமைக்குழு கூட்டத்தை கூட்டி அத் தாமதங்களை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக முடியுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் இந்த நிறுவன அலுவலர்களின் உதவி பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்படுவதுடன், அதன் மூலம் ஏற்படும் தாமதங்களை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (ஈ) | வேரஸ் கங்கை மழைநீர் சுத்திகரிப்பு மற்றும் சுற்றாடலை மேம்படுத்தும் கருத்திட்டத்தின் காணிகளை சுவீகரிக்கும் செயன்முறையை ஆரம்பித்து 07 ஆண்களிலும் விஞ்சிய காலமொன்று கடந்துள்ளதுடன் அதற்காக ரூபா 2,387.6 மில்லியன் செலவிட்டிருந்த போதும் அதன் நடவடிக்கைகள் முடிவடைத்திருக்காததுடன், அதன் பௌதீக முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கருத்திட்ட சுவீகரிப்பு முன்னேற்றம் மீளாய்வாணடு அளவில் 6 ஆண்டுகள் அளவு கடந்துள்ளதுடன் பல்வேறு காரணங்களால் கருத்திட்ட காணி சுவீகரிக்கும் செயற்பாட்டில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளது. அதனால் கருத்திட்டத்தின் சுவீகரிக்கும் செயற்பாட்டை வினைத்திறனாக செய்து கொள்ள கூட்டுத்தாபன காணி மற்றும் விற்பனை பிரிவினால் 2020 ஆண்டு முதல் | காணி சுவீகரிக்கும் செயற்பாட்டை விரைவில் பூர்த்தி செய்து கருத்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறே தாக்கத்திற்குட்பட்ட குடும்பங்களிற்காக மீளாய்வாண்டினுள் ரூபா 1,420,000 வீட்டு வாடகையாக கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்டுள்ளது. | கருத்திட்டத்தின் காணி சுவீகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் உரிமை பரிசோதனையை துரிதப்படுத்த சில காணி சுவீகரிப்பு அலுவலர்களை புதிதாக சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்படுபவர்களுக்கு காணி சுவீகரிக்கும் சட்டம் பிரகாரம், யாப்பு ரீதியான நட்டஈட்டுத் தொகை கிடைக்கும் வரை கருத்திட்டத்தினால் தற்காலிகமாக குடியிருக்க அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் 06 மாதங்களில் 06 மாதங்களுக்கு வீட்டு வாடகை வழங்கப்படுகின்றது. | |
| (உ) | ஸ்ரீ ஜயவர்தன சரனாலயத்தினுள் அமைந்துள்ள தியசரு பூங்காயின் உத்தேச நிர்மாணங்கள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக குறித்த நிறுவனங்களினால் முன்கூட்டிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது கூட்டுத்தாபனம் நிர்மாண வேலைகளை மேற்கொண்ட காரணத்தால் அந் நிர்மாணம் 2019 திசெம்பர் முதல் நிறுத்துமாறு வனசீவராசிகன் பாதுகாப்புத் திணைக்களம் கூட்டுத்தாபனத்திற்கு அறிவித்திருந்தது. இதன் காரணமாக முன்னைய ஆண்டு இறுதியளவில் ரூபா 3.48 மில்லியன் செலவில் மேற்கொண்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிபந்தனைகள் மற்றும் பிரமாணங்களிற்கு இணங்க தயாரித்த திட்டத்தின் மீது, நிர்மாண வேலைகளை மீளாய்வாண்டு இறுதிவரையும் மீண்டும் ஆரம்பிக்க கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்தது. | வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்ற பின்னர் தியசரு பூங்காவின் உத்தேச நிர்மாண வேலைகளை ஆரம்பிக்க நடவடிக்கைகளை திட்டமிட்ட போதும், அதற்கு தேவையான நிதி ஏற்பாடு இல்லாததால் அந் நடவடிக்கைகள் தற்காலிகமாக நின்றுள்ளது. | உரியவாறு முன்கூட்டிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாது கருத்திட்டத்தை ஆரம்பிக்கக் கூடாததுடன் தற்போது ஆரம்ப செலவுகளை மேற்கொண்டுள்ள கருத்திட்டங்களை விரைவில் பூர்த்தி செய்ய வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு கூட்டுத்தாபன இயற்திர உபகரண பிரிவின் நட்டம் ரூபா 195 மில்லியனானதுடன் அதன் | இயந்திர உபகரண பிரிவின் இயந்திரங்களை கூட்டுத்தாபன அனைத்து வேலைத்தளங்கள் மற்றும் ஏனைய | இயந்திர உபகரண பிரிவின் நட்டம் குறைவடையும் வகையில் |

வருடாந்த கிரயமான ரூபா 860 மில்லியனினுள் ரூபா 407 மில்லியனான ஊழியர் கிரயமொன்று உள்ளடங்கியிருந்தது. அது மொத்த கிரயத்தின் 47 சதவீதமானதுடன் இயந்திர உபகரண பிரிவை நவீனமயமாக்கி சேவையிலுள்ள ஊழியர்கள் பயனுறுதிமிக்க சேவையில் ஈடுபடுத்த மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

கருத்திட்டங்களிற்காக வழங்கல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது சேவை பிரிவினால் ஆகையால், இப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளினுள் ஏற்படும் அனைத்து கிரயமும் அவ்வாறே கணக்கிடப்பட்டு குறித்த பிரிவிற்கு உள்ளீர்பு செய்வதில் கடினமொன்று காணப்படுவதாக இனங்காணப்பட்டுள்ளது.

அவ்வாறே இயந்திர பிரிவின் மொத்த ஊழியர் எண்ணிக்கை 500 இற்கு கிட்டுவதுடன், அவ் ஊழியர் எண்ணிக்கையின் 85% அளவு நிரந்தர ஊழியர்கள் ஆவதுடன், அனைவரும் பயிற்றப்பட்ட இயந்திரவியல் அறிவுடன் கூடிய குழுக்களுடன் உள்ளடங்குகின்றனர். அதனால் வழங்கும் சேவைக்காக சேவை கிரயமும் உயர்ந்த பெறுமானத்தை எடுக்கிறது.

இயந்திர பிரிவில் தற்போது காணப்படும் அநேக இயந்திரங்கள் 15 ஆண்டுகளிற்கு முன்னர் கொள்வனவு செய்தவைகளாவதுடன், அவ் இயந்திரங்களினால் எதிர்பார்த்த வினைத்திறனுடன் சேவையில் ஈடுபடுத்த முடியாததால் அவற்றினால் எதிர்பார்க்கும் வருமானம் கிடைப்பதில்லை.

ஊழியர்களின் சம்பளம் மற்றும ஏனைய கொடுப்பனவுகள் அதிகரித்த போதும் அவ் ஊழியர்களிடமிருந்து அதற்கு சமமாக பெற்றுக் கொள்ளும் சேவையின் தரம் அதிகரிக்காததன் மீது செலவு மாத்திரம் அதிகரிக்கும் நிலைமை ஒன்று ஏற்பட்டுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளதுடன், இந் நிலையை சரிசெய்து கொள்ள கலந்துரையாடி தீர்மானத்திற்கு வரவுள்ளது.

கிரயத்தை முகாமை செய்ய வேண்டும்.

### 3.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனம் முன்னைய ஆண்டில் ரூபா 41.00 மில்லியன் பெறுமதியான 02 Long Arum Excavator இயந்திரங்களை கொள்வனவு செய்திருந்ததுடன் வழங்குனர் கூட்டுத்தாபனம் எதிர்பார்த்த தொழிநுட்ப அளவுத் திட்டங்களில் குறிப்பிடப்படும் Long Aram Excavator இற்கு பதிலாக Short Aram Excavator இயந்திரங்களின் உதிரிப்பாகங்களை பொருத்தி போலியாக கூட்டுத்தாபனத்திற்கு 2019 ஆண்டில் வழங்கியிருந்ததுடன் அது தொடர்பாக கூட்டுத்தாபன இயந்திர இயக்குனர்களினால் ஆரம்பத்திளேயே எழுத்து மூலம் அறிவித்திருந்த போதும் அத்தொழிநுட்ப மோசடியை இனங்காண கூட்டுத்தாபன இயந்திரப் பிரிவிற்கு இயலாமை மற்றும் வழங்குனருக்கு கொடுப்பனவு செய்கையில் அவ்வியந்திரங்கள் எதிர்பார்த்த செயற்பாட்டுடன் காணப்படுவதாக இயந்திர பிரிவின் பொறியியலாளர்களுடன் கூடிய குழுவொன்றினால் பரிசோதனை அறிக்கை ஒன்றை கணக்கு பிரிவிற்கு வழங்கியதன் மீது குறித்த கொடுப்பனவை மேற்கொண்டதால் நிறுவனத்திற்கு நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | இது தொடர்பாக மேலதிக விசாரணைக்காக அதன் போது வரிசை அமைச்சின் செயளாலரினால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் மதிப்பிக்குரிய நீதிமன்றத்திற்கு விடயங்களை அறிக்கையிட்ட பின்னர் தற்போது நீதிமன்ற செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை மற்றும் மதிப்பிற்குரிய நீதிமன்றத்தின் தீர்மானத்தின் மீது முன் நடவடிக்கை எடுக்கப்படும். | போலியான புலனாய்வு அறிக்கையொன்றை வழங்குவதுடன் தொடர்புபட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2018 ஒக்டோபர் 27 திகதி நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்ட ராகம 400 வீடுகளை நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்காக 2020 ஆண்டு இறுதியளவில் கூட்டுத்தாபனத்தினால் ரூபா 51.02 மில்லியனான செலவொன்றை மேற்கொண்டிருந்ததுடன் உரிய சாத்தியப்பாட்டு ஆய்வின்றி கருத்திட்டத்தை ஆரம்பித்தன் மீது 2019 சனவரி மாதம் கருத்திட்டம் இடைநிறுத்தபட்டிருந்தது. எனினும் அவ்வீடுகளை பெற்றுக் கொள்ள விண்ணப்பங்களை முன்வைத்த 783 பேர்களிடமிருந்து 2018 வரையான காலத்தினுள் அறவிட்ட மீள் செலுத்தப்படாத ரூபா 683,479 ஆன | ராகம வீடமைப்பு கருத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட காணியில் மீண்டும் மண் நிரப்பல் மற்றும் ஏனை உட்கட்டமைப்பு வசதிகளை கூட்டுத்தாபன நிர்மாண பிரிவினூடாக மேற்கொண்டதுடன் அதற்காக கிரயமொன்றை செய்ய நேரிட்டது அவ்வாறே, வெளி விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருவதற்கு விண்ணப்ப கட்டணமாக ரூபா 624,000/- தொகையை கூட்டுத்தாபனம் அறவிட்டுள்ளது. | வீட்டு விண்ணப்பதாரிகளிடமிருந்து பெற்றுள்ள தொகையை கருத்திட்டத்தை கைவிட்டுள்ள காரணத்தால் மீண்டும் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். புதிய கருத்திட்டமொன்றை ஆரம்பிக்க முன்னர் அக் கருத்திட்டம் தொடர்பாக சரியான சாத்தியப்பாட்டு ஆய்வொன்றை மேற்கொள்ள |

| | | | |
|---|---|---|---|
| | வைப்புக்களை கருத்திட்டத்தை இடைநிறுத்தியதன் மீது மீள் செலுத்த வேண்டிய போதும் அவ்வாறு செலுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | வேண்டும். |

**3.7 விளைவற்ற அல்ல குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக பெல்லன்விலையில் காணப்பட்ட 06 வியாபார அறைகளை 2016 ஆண்டு முதல் வாடகை அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்காது 2022 மார்ச் 31 திகதி வரையும் மூடப்பட்டிருந்தன. இதன் காரணமாக 2016 முதல் 2020 திசெம்பர் 31 வரை கூட்டுத்தாபனத்திற்கு இழக்கப்பட்ட வருமானம் ரூபா 108.45 மில்லியனானது. | 2014 ஆண்டின் போது பெல்லன்வில வளவில் காணப்பட்ட 12 வியாபார அறைகளை மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்கியுள்ளதுடன், 2017 நவம்பர் மாதம் அளவில் அவ் 12 வியாபார அறைகள் 12 இன் 6 இனது வியாபார நடவடிக்கைகள் இடையில் நிறுத்தப்பட்டிருந்தன. அந்த 6 வியாபார அறைகளுக்காக 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் விலை மனு கோரல் மற்றும் பிரேரனைகள் கோரல் செய்யப்பட்டுள்ளது. அதற்காக பதில்கள் கிடைக்கவில்லை. 2022 மே மாதம் அளவில் மீண்டும் அவ் வியாபார அறைகளுக்காக பிரேரனைகளை (RFP) கோருவதற்கு திட்டமிட்டுள்ளன. | வியாபார அறைகளை கொள்வனவாளர்களுக்கு வழங்கி வருமானம் ஈட்டிக்கொள்ள முறையான நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| (ஆ) | மாதின்னாகொட வீடமைப்பு கருத்திட்டத்திற்காக சுவீகரிக்க உத்தேச காணியை சுவீகரிக்க முன்னர் அதாவது 2018 ஆண்டளவில் அக்காணிகளிற்காக ரூபா 112 மில்லியன் செலவிட்டு துணை உட்பிரவேச பாதையொன்றை அமைக்க நடவடிக்கை எடுத்தல் மற்றும் 2022 மார்ச் 31 திகதி வரை காணிகளை சுவீகரிக்காத காரணத்தால் அதற்காக செலவிட்ட பணம் விளைவற்ற செலவொன்றாக காணப்பட்டது. | பாதையை அமைக்கும் போது அதன் அருகில் அமைந்துள்ள அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கு காணப்பட்ட சூழல் நிலையினுள் எதிர்பாராதவாறு மேற்கொள்ள முடியாமலிருந்தது. அவ்வாறாயினும் அப்பாதை அமைப்பதன் காரணமாக அதன் அருகில் மொத்த நீரேந்து நில பிரதேசத்தை (Retention Area) வெளித்தரப்பினர்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியுமானது இக் கருத்திட்டத்தின் மிகுந்த நலனாகும். | கருத்திட்டத்தை ஆரம்பிக்க முன்னர் தேவையான காணிகளை சுவீகரிக்கும் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

## 3.8 ஆளணி நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 திகதியன்று கூட்டுத்தாபனத்தின் அங்கீகார ஆளணி 1875 ஆனதுடன் அத்திகதியன்று உள்ளவாறான ஆளணி 1349 ஆனதில் கூட்டுத்தாபன ஆளணில் 554 வெற்றிடங்களும் 28 மிகையும் நிலவின. அவ்வாறே மீளாய்வாண்டினுள் கூட்டுத்தாபனத்தினால் தமது வேலைத் தளங்களின் செயற்பாடுகளுக்காக ஒரு நாளைக்கு ரூபா 1,750 மற்றும் ரூபா 1,600 கொடுப்பனவின் கீழ் சிவில் பாதுப்பு திணைக்களத்திலிருந்து 105 ஊழயர்களின் சேவை பெறப்பட்டிருந்தன. | 2020.12.31 திகதியளவில் கூட்டுத்தாபன ஆளணியினுள் நிலையான அடிப்படையில் 1726 மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 149 ஆக 1875 பதவிகள் அங்கீகரித்து காணப்பட்ட போதும், அத்தினத்தில் கூட்டுத்தாபன சேவையில் ஈடுபட்டிருந்த ஆளணி 1349 ஆனதால், நிலையான ஆளணியில் நிலவிய பதவிகளுக்குரிய 377 வெற்றிடங்கள் காணப்பட்டன.<br><br>குறித்த கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்டவாறு அங்கீகார ஆளணியில் காணப்பட்ட வெற்றிடங்களிற்காக கூட்டுத்தாபனத்தில் காணப்படும் சேவை தேவைப்பாட்டை கவனத்திற் கொண்டு குறித்த பதவிகளில் அவ் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>கூட்டுத்தானத்தினால் செயற்படுத்தும் கருத்திட்டங்களை எதிர்பார்த்த காலஎல்லையினுள் பூர்த்தி செய்ய இயக்க கடமைகளில் காணப்பட்ட சேவை தேவைப்பாட்டை கவனத்திற் கொண்டு தொழிலாளர்களின் சேவையை பெற்றுக் கொள்வது தொடர்பாக LRDC சேவை கம்பனியுடன் கைச்சாத்திட்டுள்ள சேவை வழங்கல் உடன்படிக்கைக்கு இணங்கும் வகையில் உரிய சேவை வழங்கும் கட்டணத்தின் கீழ் குறித்த சேவை தேவைப்பாட்டை சிவில் பாதுகாப்பு திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ள கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அங்கீகார ஆளணியின் மீது வெற்றிடங்களை நிரப்ப வேண்டியதுடன் அங்கீகார ஆளணிற்கு மாற்றமாக சேவையில் ஈடுபடுத்தும் அலுவலர்கள் பற்றி வெளிப்படுத்த வேண்டும். |

## 3.9 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நிர்வாக குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை அணுசக்தி அதிகார சபையின் இரசாயண கூட A அலகு கட்டிடத்தை நிர்மாணித்தல் தொடர்பாக கூட்டுத்தாபனத்திற்கு 2014 ஆண்டில் கிடைக்க வேண்டிய ரூபா 61.58 மில்லியனான பெறுமதியை கூட்டுத்தாபனத்தால் மீளாய்வாண்டு இறுதி வரை அறவிட்டிருக்கவில்லை. கட்டிடத்தை திட்டமிடலின் போது ஏற்பட்ட தவறான நிலைமை காரணமாக Micro piling இற்காக கூட்டுத்தானத்தால் மேற்கொண்ட ரூபா 46.40 மில்லியனான செலவை மீள்நிரப்ப இலங்கை அணுசக்தி அதிகார சபை தனது இணக்கப்பாட்டை தெரிவித்திருக்கவில்லை. இது தொடர்பாக பொறுப்புவாய்ந்த தரப்பினரிற்கு எதிராக கூட்டுத்தாபனத்தினால் எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | இலங்கை அணுசக்தி அதிகார சபையுடன் ஏற்படுத்திய ஒப்பந்த பெறுமதி ரூபா 308.65 மில்லியனான போதும் இறுதி பட்டியலாக சமர்பிக்கப்பட்ட 435.97 மில்லியன் பெறுமதியிலிருந்து ரூபா 431.87 மில்லியன் உறுதி செய்யப்பட்டது. அதற்கு மேலதிகமாக ரூபா 46.4 மில்லியன் பட்டியலொன்றை Micro piling இற்காக சமரப்பித்த போதும் அந்த பட்டியல் இன்னும் உறுதி செய்யப்படவில்லை. அதற்கான ரூபா 46.40 மில்லியன் பட்டியல்களை அறவிட தொடர்ந்தும் இலங்கை அணுசக்தி அதிகார சபையுடன் செயற்பட்ட போதும் அதற்காக உடன்படவில்லை. இந்த பட்டியலை அறவிடுவது தொடர்பாக நிச்சயமற்ற தன்மையொன்று காணப்படுவதால் அதற்கு தேவையான ஐயக்கடன் ஒதுக்கமொன்றை கணக்குகளில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. | ஒப்பந்தத்தை சரியாக திட்டமிட்டு அதன் பிரகாரம் உடன்படிக்கை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். திட்டமிடலின் பலவீனங்கள் தொடர்பாக பொறுப்புவாய்ந்த அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஜப்பன் சர்வதேச உதவி முகவர் நிறுவனத்தால் (JICA) நிதியீட்டம் செய்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் செயற்படுத்திய ஹெமில்டன் கால்வாய் புனர்நிர்மாணம் செய்யும் கருத்திட்டத்தை பூர்த்தி செய்துள்ள போதும் அதற்குரிய நிறுத்தப் பணத்தையும் உள்ளடங்களாக கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 12.80 மில்லியன் பணத்தை மீளாய்வாண்டு இறுதிவரையும் அவ் அமைச்சிலிருந்து அறவிட்டிருக்கவில்லை. | இக் கருத்திட்டத்திற்கு உரியதாக மேலும் ரூபா 12.80 மில்லியன் கிடைக்க வேண்டியதுடன் அதில் ரூபா 3.75 மில்லியன் தொகை நிறுத்தற் பணத்தின் மீதியாகும். இந் நிறுத்தற் பணத்தை நீர்கொழும்பு நகர சபை மூலம் செலுத்த வேண்டுமென (TRIP) கருத்திட்டத்தினால் குறிப்பிட்ட போதும் அதற்கு தேவையான ஏற்பாடு TRIP கருத்திட்டத்திலிருந்து | கூட்டுத்தாபனத்திற்கு நட்டம் ஏற்படாதவாறு ஒப்பந்த நடவடிக்கைகளை வினைத்திறனாக முகாமை செய்ய வேண்டும். அறவிட முடியாத அளவை சரியான அங்கீகாரத்தின் மீது உடன்படிக்கைகளிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கப்படாததால் கொடுப்பனவு செய்ய முடியாது என நீர்கொழும்பு நகர சபை அறிவித்துள்ளது. மீதி ரூபா 9.08 தொகைக்காக JICA நிறுவனத்தின் முன்கூட்டிய அங்கீகாரம் இல்லாததால் கொடுப்பனவு செய்ய முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொது திறைசேரி தலையீட்டின் மீது நீர்கொழும்பு நகர சபை மற்றும் சுற்றுலாதுறை அமைச்சை (TRIP கருத்திட்டத்திற்கு பதிலாக) அழைத்து விசாரித்ததுடன் அந்த இரண்டு தரப்பினருக்கும் இக் கொடுப்பனவை செய்ய இயலாதுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், இந்த மொத்த பெறுமதியையும் தொடர்ந்தும் அறவிட முடியாத நிலையில் காணப்படுவதால் தேவையான ஐயக்கடன் ஏற்பாட்டை கணக்குகளில் ஒதுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கிறேன். | |
| (இ) | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2 பிரிவின் பிரகாரம் எதிர்வரும் 03 ஆண்டுகளிற்குரிய (2020 – 2022) பெறுகைகள் செயற்பாடுகள் உள்ளடங்குமாறு பிரதான பெறுகைகள் திட்டமொன்றை கூட்டுத்தாபனத்தால் தயாரித்திருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டிற்காக விரிவான பெறுகைகள் திட்டமொன்றிற்கு பதிலாக தயாரிக்கப்பட்ட பெறுகைகள் திட்டத்தினூடாக பெறுகைகளுக்கு உரிய துணை செயப்பாடுகள், (Procurement Activities) அந்த செயற்பாடுகளிற்குரிய மதிப்பிடப்பட்ட பெறுமதி மற்றும் அப் பெறுமதிக்குரியதாக நியமிக்க வேண்டிய பெறுகைகள் குழு எதுவென மற்றும் | தற்போது நிறவன ரீதியான திட்டம் (Corporate Plan) தயாரிக்கப்படுவதுடன், அதனுடன் பெறுகைகள் திட்டத்தை தயாரிக்க நடவடிக்கைகள் ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளது. அப் பெறுகைகள் திட்டத்தின் மூலம் பெறுகைகளுக்கான துணை செயற்பாடுகள் பெறுமதிகள் மற்றும் அதற்குரிய பெறுகைகள் முழுவையும் உள்ளடக்கி தயாரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு கூட்டுத்தாபனத்தின் கருத்திட்டம் போன்று வாடிக்கையாளர் கருத்திட்டத்திற்கான பெறுகைகள் திட்டத்தையும் | நிறுவன நோக்கத்தை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் முன்வரும் ஆண்டுகளுக்காக பெறுகைகள் திட்டத்தை தயாரித்து அதற்கு இணங்கக் கூடியவாறு தேவையான செயற்பாடுகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுகைகளுக்குரிய சரியான கால சட்டமும் வெளிக்காட்டப்படவில்லை. மேலும் அரச மானியத்திற்காக மாத்திரம் அத்திட்டத்தை தயாரித்திருந்ததுடன் கூட்டுத்தாபன கருத்திட்டங்கள் மற்றும் வாடிக்கையாளர் கருத்திட்டங்களிற்குரிய பெறுகைகள் விபரமும் அதனுள் உள்ளடக்கப்படவில்லை. | உள்ளடக்கி தயாரிக்கப்படும். | |
| (ஈ) | 2020 மே 31 திகதியுடன் பூர்திதி செய்ய உத்தேசித்த திருத்திய ஒப்பந்த பெறுமதி ரூபா 752.43 மில்லியனான வாடிக்கையாளர் கருத்திட்டமொன்றான கிரிமண்டல மாவத்தை உத்தேச வெள்ள கட்டுப்பாட்டு மற்றும் நீர்வள முகாமைத்துவ மத்திய நிலையத்தின் நிர்மாணத்திற்காக மீளாய்வாண்டு இறுதியில் மேற்கொண்டிருந்த கிரயம் ரூபா 446.06 மில்லியனானதுடன் 2021 திசெம்பர் 11 திகதி வரை காலநீடிப்பொன்றை வழங்கியிருந்த கருத்திட்டத்தின் மீளாய்வாண்டு இறுதிவரை பௌதீக முன்னேற்றம் 80 சதவீதமும் நிதி முன்னேற்றம் 43 சதவீதமுமானதால் கருத்திட்டத்தின் இறுதியில் கூட்டுத்தாபனத்திற்கு நட்டமொன்று ஏற்படும் அபாயம் காணப்பட்டது. அவ்வாறே 2020 ஆண்டிறுதியில் கருத்திட்டத்திற்காக கூட்டுத்தாபனம் சமர்ப்பித்திருந்த ரூபா 343.9 மில்லியனான கொடுப்பனவு கோரிக்கை படிவங்களிலிருந்து ரூபா 91 மில்லியன் 2022 மார்ச் 31 திகதி வரையும் வாடிக்கையாளரினால் உறுதி செய்து கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திருத்திய ஒப்பந்த பெறுமதி ரூபா 752.43 மில்லியனான கருத்திட்டங்களுக்கு நாட்டில் நிலவிய கொரோனா தொற்று நிலைமை காரணமாக ஏற்பட்ட ஊழியர் மற்றும் மூலப்பொருள் பற்றாக்குறை காரணமாக கருத்திட்ட சேவை வழங்குனரினால் 2021.12.11 வரை கால நீடிப்பொன்று வழங்கப்பட்டது. 2020 திரண்ட ஆண்டு முடிவடையும் போது கட்டிடத்தை கட்டி முடித்திருந்த காரணத்தால் பௌதீக முன்னேற்றம் 80% ஆனதுடன் அது தொடர்பான கொடுப்பனவுகளை எமது வாடிக்கையாளரான நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் கொடுப்பனவு செய்யாததால் நிதி முன்னேற்றம் குறைவடைந்தது. 2020 ஆண்டிற்காக கருத்திட்டங்களிற்காக கூட்டுத்தாபனம் முன்வைத்திருந்த ரூபா 343.9 மில்லியன் ஆன கொடுப்பனவு கோரிக்கை பத்திரத்திற்காக ரூபா 311.7 மில்லியன் தொகையை கருத்திட்ட ஆலோசகர் உறுதி செய்துள்ளார். மேலும் தற்போது குறித்த உடன்பட்ட ஒப்பந்தம் பூர்த்தியாகி உள்ளதுடன் கருத்திட்ட மதியுரை நிறுவனத்தினால் இறுதி பட்டியலிற்காக ரூபா 550.2 | ஒப்பந்த நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொண்டு நட்டத்தை குறைத்துக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மல்லியனி தொகையை உறுதி செய்துள்ளது. அதனுடன் தொடர்பான கருத்திட்டத்தின் கிரயம் ரூபா 508.6 மில்லியன் ஆகும். | |
| (உ) | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.8 பிரிவு பிரகாரம் ஒப்பந்ததாரர்கள் ஆரம்பத்திளேயே ஒப்பந்தத்தை பூர்த்தி செய்யவுள்ள திகதியை கடந்து 28 தினங்கள் வரை செல்லுபடியாகும் விதத்தில் செயற்பாட்டு பிணைமுறி பெற்றுக் கொள்ள வேண்டிய போதும் அவ்வாறு செயற்பாட்டு பிணைமுறி பெற்றுக் கொள்ளாது ஒப்பந்தத்திற்குட்பட்டு பின்னர் பெறுகைகள் வழிகாட்டிக்கு மாற்றமாக நடைமுறை வேலைககளிற்கு ஒப்பந்ததாரர்கள் சமர்ப்பிக்கும் பட்டியல்களிலிருந்து ஒப்பந்த கையளிப்பின் போது அறவிட வேண்டிய செயற்பாட்டு பிணைமுறி பெறுமதியாக மீளாய்வாண்டில் ரூபா 27.4 மில்லியனை கூட்டுத்தாபனம் அறவிட்டிருந்தது. | தங்களது அவானிப்புடன் உடன்படுகிறேன்.<br><br>எதிர்காலத்தில் ஒப்பந்ததாரர்களின் பட்டியல்களிலிருந்து செயலாற்றுகை பிணை முறி அறவிடுவதற்கு பதிலாக, ஒப்பந்ததாரர்களின் வங்கி பிணை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | பிபிதெமு பொலன்னறுவ வேலைத் திட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டு இறுதியில் 16 கருத்திட்டங்களை பூர்த்தி செய்து திசெம்பர் மாதம் ஒப்படைந்திருந்ததுடன் அதற்காக ரூபா 997.30 மில்லியன் பட்டியல்கள் மூலம் வாடிக்கையாளர்களிடமிருந்து கோரியிருந்த போதும் ரூபா 929.03 மில்லியன் பட்டியல்கள் மாத்திரமே கொடுப்பனவிற்கு உறுதிப்படுத்தியதால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 68.27 மில்லியன் வருமானம் இலக்கப்பட்டிருந்தது. பூர்த்தி செய்த வேலைகளின் குறைபாடுகள் உள்ளமை, கூட்டுத்தாபன உப ஒப்பந்ததாரர்களுக்கு பூர்த்தி செய்த வேலைகளிற்கு மேலதிகமாக கொடுப்பனவு செய்தல் போன்ற விடயங்கள் இந் நிலைமைக்கு காரணமாக இருந்தன. | பிபிதெமு பொலன்னறுவ கருத்திட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனத்தால் 16 கருத்திட்டங்களின் வேலைகள் மீளாய்வாண்டினுள் பூர்த்தி செய்யப்பட்டன. அதன் பிரகாரம் ரூபா 997.3 மில்லியன் பட்டியல்கள் சேவை வழங்குனருக்கு அனுப்பப்பட்டதுடன் மதியுரை கம்பனியினால் உறுதி செய்துள்ள தொகை சரியென உறுதியாகியுள்ளது. அதன் பிரகாரம் தற்போது 96% இற்கு அதிகமான ரூபா 895.9 மில்லியன் தொகை கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்துள்ளதுடன் ரூபா 33.13 மில்லியன் கிடைக்கவுள்ளது. இது தொடர்பாக கூட்டுத்தாபனம் சேவை வழங்குனர் மாவட்ட செயலகம் பொலன்னறுவை உடன் தொடர்ந்து | ஒப்பந்தங்களின் பௌதீக முன்னேற்றத்திற்கு ஒப்பாக நிதி முன்னேற்றத்தை அதிகரித்துக் கொள்ள கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கலந்துரையாடி அத்தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் துணை ஒப்பந்ததாரர்களினால் மேற்கொண்ட செயற்பாடுகளுக்கு உரிய முறையில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | |
| (எ) | பெறுமதி ரூபா 10.59 மில்லியனான 9 மதியுரை சேவை ஒப்பந்தங்களின் மீளாய்வாண்டு இறுதியில் பௌதீக முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடையில் நிலவியதுடன் கிடைக்க வேண்டிய ரூபா 10.59 மில்லியனிலிருந்து எந்த தொகையும் அதிகார சபைக்கு கிடைத்திருக்கவில்லை. | இந்த 9 கருத்திட்டங்களின் சேவை நடவடிக்கைகள் பூர்த்தியான பின்னர் அது பற்றி குறித்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்துடன், கருத்திட்டத்தின் ஒரு பகுதி பணம் தற்போது கிடைத்துள்ளது. | ஒப்பந்தங்களிலிருந்து மேலும் அறவிட வேண்டியுள்ள தொகையை விரைவில் அறவிட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டு இறுதியில் வேலைகள் பூர்த்தியான ரூபா 18.8 மில்லியன் பெறுமதியான 04 மதியுரை ஒப்பந்தங்களிற்குரிய நிதி முன்னேற்றம் 30 சதவீதத்திற்கும் 59 சதவீதத்திற்கும் இடையில் குறைந்த பெறுமானத்தில் நிலவியது. | இந்த 4 கருத்திட்டங்களின் வேலைகள் பூர்த்தியான பின்னர் அது பற்றி குறித்த நிறுவனத்திற்கு அறிவித்துள்ளதுடன், கருத்திட்டத்தின் ஒரு பகுதி பணம் தற்போது கிடைத்துள்ளது. அது தொடர்பாக விரிவான அறிக்கையொன்றை இணைப்பு 03 இன் மூலம் காட்டப்பட்டுள்ளது. | ஒப்பந்த முகாமைத்துவ நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த வேண்டும். |
| (ஐ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.6.1 பிரகாரம் அளவுத்திட்ட மீளாய்வு மற்றும் அங்கீகரித்தல், விலைமணு கோரல் பதிவேட்டை மீளாய்வு செய்து அங்கீகரித்தல் போன்ற நடவடிக்கைகள் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் பொறுப்புக்கள் மற்றும் கடமைகளான போதும் 40 அடி குளிரூட்டப்பட்ட கொள்களன்களை கொள்வனவு செய்வதுடன் தொடர்பான பெறுகைகளை மேற்கொள்ளும் போது விலைமணு திறக்கும் திகதியான 2019 திசெம்பர் 12 திகதிக்கு பின்னர் அதாவது 2019 திசெம்பர் 13 திகதி தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு நியமித்திருந்ததில் தொழிநுட்ப ஆய்வுக் குழுவினால் செய்ய | அடி 40 குளிரூட்டப்பட்ட கொள்களன்களை கொள்வனவு செய்வதுடன் தொடர்பான காலஎல்லையினுள் அப் பண்டத்தை Standard Product ஆகக் கருதி விலை மணு கோரியதன் பின்னர் தொழிநுட்பக் மதிப்பீட்டுக் குழுவொன்றின் மூலம் மதிப்பீடு செய்து பெறுகைகள் குழுவின் அங்காரத்துடன், பண்டக கட்டளை பத்திரம் விநியோகிக்கப்பட்டுள்ளது. அவ்வாறாயினும், தற்போது கொள்வனவு செய்யப்படும் பெறுமதியிலும் அதிக மூலதன பண்டத்துடன் | ஒப்பந்த முகாமைத்துவ நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய அளவுத்திட்டம் தயாரித்தல் போன்ற நடவடிக்கைகள் அக்குழுவினால் தயாரித்திருக்காதது அவதானிக்கப்பட்டது. | தொடர்பான பெறுகைகள் நடவடிக்கைகளின் போது அளவுத்திட்டம் மற்றும் ஆவண மீளாய்வு, அங்கீகரித்தல், விலைமனு கோரும் பதிவேட்டை மீளாய்வு செய்து அங்கீகரித்தல் போன்ற நடவடிக்கைகள் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மாத்திரம் செய்யப்படுகின்றது. | |
| (ஒ) | கூட்டுத்தாபனத்தினால் சேவை பெறுனர் ஒப்பந்தத்திற்காக உடன்படிக்கை செய்யும் போது அந்த ஒவ்வொறு நிறுவனத்தினால் விலைகள் முன்வைத்த பெறுமதிக்கு உடன்படிக்கை செய்திருந்த போதும் நிலையான தொழிநுட்ப குழு விகிதத்தின் கீழ் (STC) நிபந்தனைகளை உள்ளடக்கி உடன்படிக்கை செய்யத காரணத்தால் மீளாய்வாண்டில் 2 வாடிக்கையாளர் ஒப்பந்தங்களிற்குரியதாக கணக்கீடு செய்யப்பட்ட ஒப்பந்த வருமானம் ஆண்டினுள நிலையான தொழிநுட்ப குழு (STC) செய்த விகித பரிந்துரைகளின் பிரகாரம் செய்து கணக்கிடுகைகளின் போது அவ் ஒப்பந்தங்களிலிருந்து ரூபா 14.77 மில்லியனான வருமானம் இழக்கப்பட்டிருந்ததுடன் கடந்த ஆண்டில் பூர்த்தி செய்திருந்த 05 வாடிக்கையாளர் ஒப்பந்தங்களிற்குரியதாக மீளாய்வாண்டில் நிலையான தொழிநுட்ப குழு (STC) மூலம் பரிந்துரைத்த விகிதங்களின் பிரகாரம் செய்த கணக்கிடலினால் கூட்டுத்தானத்திற்கு ரூபா 18.01 மிலலியனான ஒப்பந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | கருத்திட்டத்திற்காக 2020 ஆண்டின் போது நிலையான தொழிநுட்ப குழுவின் (STC) மூலம் விகிதங்கள் பரிந்துரைத்த போதும் ஆண்டிறுதி கணக்குகள் தயாரிக்கும் போதும் இறுதி பட்டியல் தொடர்பாக இறுதி வேலை சான்றிதழ் சமர்பிக்கப்படாததால் அது தொடர்பாக செம்மையாக்க முடியாது போனதுடன் 2021 ஆண்டில் குறித்த செம்மையாக்கல் செய்யப்பட்டுள்ளது. கணக்கீட்டு நியமம் பிரகாரம் ஒப்பந்த வருமானத்தை கணக்கீடு செய்ய முடியுமாவது சான்றிதழ் பெற்ற பொறியியலாளரின் வேலை சான்றிதழ் கிடைத்த பின்னராகையால் 2020 ஆண்டில் குறித்த செம்மையாக்கல்களை செய்ய முடியாதிருந்தது. மேலும் இந்த நிலையான தொழிநுட்ப குழுவின் (STC) மூலம் பரிந்துரைத்த விகிதங்களை பெற்றுக் கொள்ளும் செயன்முறைக்காக அதிக காலமொன்று செலவாவதால் இவ்வாறான தவறுகள் ஏற்பட நேரடியாக தாக்கம் செலுத்தும். | ஒப்பந்தத்தை பௌதீக முன்னேற்றத்திற்கு ஒப்பாக நிதி முன்னேற்றத்தையும் அடைந்து கொள்ள வேண்டும். |